தமிழ்ப் பெருமாட்டி

மலர் 11. | 1936- | இதழ் 11.

காந்திமதி

கே. துரைஸ்வாமி ஐயங்கார், B.A.

OFFICE OF THE REGISTRAR
1 OCT 1937
N36·2·11

முதலாவது ஆண்டின் சஞ்சிகைகள்

முதலாவது ஆண்டில் வெளியான பகுதிகள் அடியில் வருமாறு புஸ்தக[illegible]மாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றன.

	ரூ.	அ.	பை.
நாவல[illegible] பாங்கி அல்லது திடுப்பிரவேச [illegible]சுகாஜாலப் பிரதேசியர் 1, 2 பாகங்கள் ...	3	8	0
சமய விளக்கம்	0	8	0
விக்ஞான் வினவிடை	0	8	0
தேக தத்துவ சாஸ்திரம்	0	8	0
ஆகமொத்தம்	5	0	0

எல்லாவற்றிற்கும் ஆர்டர் செய்தால், தபாற் செலவு இல்லாமல், ரூ. 5-க்கு எல்லா புஸ்தகங்களும் அனுப்பப்படும். ஒன்றை அல்லது சிலவற்றை மாத்திரம் வாங்கினுல், தபாற் செலவு சேரும்:

இரண்டாவது ஆண்டில் புதிதாய் சந்தாதாரராய்ச் சேருவோருக்கு இவையாவும் ரூ. 3-8-0க்கு தபாற் செலவின்றி அனுப்பப்படும். ஏற்கனவே இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்பிவிட்டவர்கள் ரூ. 3-8-0 மணியார்டர் செய்வது போதுயானது. இனிமேல் சேருவோர் இரண்டு வருஷங்களுக்கும் சேர விரும்பினுல் ரூ. 5-8-0 மணியார்டர் செய்யவேண்டும்.

ஜீவிய சந்தா ரூ. 20. இதை அனுப்புவோருக்கு இந்த ஆசிரியரால் இனி வெளியிடப்படும் பத்திரிகைகளும், இதர புஸ்தகங்களும் ஒவ்வொன்று தபாற் செலவின்றி அனுப்பப்படும். இது நூலாசிரியருடைய ஆயுள்காலம் வரையில் செல்லுபடியாகும்.

இனும் புஸ்தகம்

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்புவோர், **சந்தாத்** தொகையோடு 8 அணு சேர்த்தனுப்பினுல், ரூ. 1-8-0 விலை பெற்றதும், இந்நூலாசிரியரால் எழுதப்பெற்றதுமான இங்கிலா[illegible] தேச சரித்திர மொன்று இனுமாய் அனுப்பப்படும். நேரில் ப[illegible] செலுத்துவோர் 4 அணு கொடுப்பது போதுமானது.

இந்த இனும் புஸ்தகம் 1936ஆ ஜூன் மாதம் 30உ வரையில் சேருவோருக்கு மாத்திரமே கொடுக்கப்படும்.

ஏற்கனவே ரூ. 2 அனுப்பிவிட்டவர்கள் 8 அணுவுக்கு ஸ்டாம்ப் அனுப்பினுல், அல்லது, நேரில் 4 அணு செலுத்தினுல், இனும் புஸ்தகம் கிடைக்கும்.

OFFICE OF THE ... 17 OCT 1938

அத்தியாயம்—9

திகம்பரத்தின் திக்விஜயக் கோத்து

அரங்கசாமி முதலியார் தமது மகளான காந்திமதியின் கலியாணத்தைப்பற்றி இராஜப்ப முதலியாருடன் கலந்து ஆலோசித்து, ஒரு வாரத்திற்குப் பிறகு வரவிருந்த ஒரு சுபமுகூர்த்தத்தில் நடத்த வேண்டுமென்று முடிவு செய்துகொண்டார். அவர்கள் யோகீசுவரரைப் பார்த்துவிட்டு வந்த பிறகு இரண்டு நாட்களாயின. அரங்கசாமி முதலியார் மணிவண்ணனை அறவே மறந்துவிட்டதுடன் இதர விஷயங்களில் தமது கவனத்தை செலுத்தியபடி இருந்தார்.

ஒருநாள் காலை சுமார் 11 மணி சமயம். அப்போது அவர் தமது ஷாப்பில் உட்கார்ந்து வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தார். அந்தக் கடையின் விற்பனைகளை இரண்டு ஆட்கள் கவனித்துக்கொண் டிருந்தனர். முதலியார் தாம் நினைத்தபோது கடைக்கு வருவதும், சிறிதுநேரம் தங்கியிருப்பதும் உடனே போய்விடுவதும் வழக்கம். அன்றையதினம் என்ன காரணத்தினாலோ அவர் கடையிலேயே உட்கார்ந்திருக்க வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு உட்கார்ந்திருந்தார்.

அவர் ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு, கலியாண சம்பந்தமாய் தமக்குத் தாமே ஏதோ திட்டம் போட்டுக்கொண் டிருந்தார். அந்த சமயத்தில் கடையின் முன் ஒருவர் வந்து நின்று, "போட்டோப் படங்கள் இருக்கின்றன. சரசமாக் [illegible]க்கிறேன். வேண்டுமா?" என்றான்.

உடனே முதலியார் அவனது பக்கம் திரும்பி, "படம் வேண்டியதில்லை" என்றார். மற்றவன், "இதோ பார்த்தீர்களா? லக்ஷ்மி படம், சரஸ்வதி படம், மகாவிஷ்ணு படம், பரமசிவன் படம், இன்னும் அநேக தினிசு படங்கள் இருக்கின்றன. இவைகளில் சிலவற்றை பூஜை யறையில் மாட்டலாம்; சிலவற்றை படுக்கை அறை முதலிய வேறு இடங்களில் மாட்டலாம். என்னிடம் 'கார்டு' அளவில் காங்கிரஸ் தலைவர்களின் படங்களிருக்கின்றன. பல தேசத்து இராஜாக்களுடைய படங்களிருக்கின்றன. அவை தவிர, வேறு பல

பிரபலமான மனிதர்களுடைய படங்களு மிருக்கின்றன" என்று கூறியபடி, படங்களை எடுத்துக் கீழே பரப்பினான். அவைகளை யெல்லாம் பார்த்த முதலியார் ஒரு படத்தை கவனித்து, "இது யாருடைய படம்?" என்று வினவினார்.

படக்காரன் :—அவருடைய பெயர் படத்திலேயே இருக்குமே!

முதலியார் :—(படத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு) இதில் பெயர் இல்லையே?

படக்காரன் :—அப்படியா! இது ஒரு ஜெமீந்தாருடைய படம். பெயர் எனக்குத் தெரியும். ஆனால், அது இப்போது நினைவிற்கு வரவில்லை.

முதலியார் :—(படத்தை மறுபடியும் உற்றுப்பார்த்துவிட்டு) நீ சொல்வது தப்பான செய்தி. இது ஜெமீந்தாருடைய படமல்ல. இவர் வேறொரு மனிதர்.

படக்காரன் :—நீங்கள் தவறுதலாய்ச் சொல்லுகிறீர்கள்போ லிருக்கிறது. இது ஒரு ஜெமீந்தாருடைய படமென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும்.

முதலியார் :—இந்தப் படத்தி லிருப்பவர் என்னுடைய சொந்தக்காரர். அப்படியிருக்க, இது வேறொருவருடைய படம் என்று சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறாயே!

படக்காரன் :—(வியப்பைத் தோற்றுவித்த முகத்துடன்) அடாடா! அப்படியா! எனக்கு இந்தப் படங்களின் விவரமே தெரியாது இன்றைய தினந்தான் இந்தப் படக் கம்பெனியின் ஏஜெண்ட் வேலையை ஏற்றுக்கொண்டேன். இதைப்பற்றி சொந்தக்காரர்தான் தப்பான தகவலைச் சொன்னாரோ, அல்லது, நானேதான் கவனப்பிசகாய் எண்ணிக்கொண்டேனோ என்பது எனக்கே நிச்சயப் படவில்லை.

முதலியார் :—படக் கம்பெனிக்காரர்கள் ஏன் தப்பான தகவல் கொடுக்கிறார்கள்? அப்படி இருக்காது.

படக்காரன் :—இது உங்கள் சொந்தக்காரருடைய படமென்று சொல்லுகிறீர்களே! இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்களேன்!

முதலியார் :—(கடையின் சுவரில் காணப்பட்ட படங்களைக் காட்டி) அதோ பார்த்ீரா இதேமாதிரி படம் இருப்பதை; எனக்கு இது வேண்டியதில்லை.

1998-43

அரங்கசாமி முதலியாரிடம் உலகநாதன், "மணிவண்ணன் இவளுக்கு உதவி செய்ததாய் நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அது சரியல்ல. அவனாலேயே இவளுக்கு இந்த அபாயம் நேரிட்டது. இவள் கடையில் பூ வாங்கிக்கொண்டிருந்தாள். அப்போது அவன் அங்கே வந்து தான் பூ வாங்கிக்கொடுக்க முயன்றான். இவள் புறப்பட்டுச்செல்ல யத்தனிக்கவே, அவன் இவளுடைய கையைப் பிடித்து பலவந்தமாய் நிறுத்தி, துன்மார்க்கமாய் ஏதோ சொல்ல முயன்றான். அதனால் இவள் மயங்கிப் போய்விட்டாள். நல்ல சமயத்தில் நான் வந்து சேர்ந்தேன். உடனே நீங்களும் வந்தீர்கள்" என்றான்.

முதலியார் :—அப்படியானால், ஓர் ஆள் கடைக்கு வந்து என்னைக் கூப்பிட்டானே! அவனை நீதான் அனுப்பினாய்போ லிருக்கிறது?—என்றார். உலகநாதன் அதைக் கேட்டு வியப்படைந்தானாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல், "நான் அனுப்பாமல் வேறே யார் அனுப்பப் போகிறார்கள். அவனே வந்தானென்று நினைத்தீர்களா?" என்றான்.

முதலியார் :—ஓ! சரிதான். மணிவண்ணன் அப்படியா நடந்து கொண்டான். இது ஆச்சரியமா யிருக்கிறதே!

உலகநாதன் :—உங்களுக்கு நான் சொன்னதில் நம்பிக்கை ஏற்படவில்லைபோ லிருக்கிறது. வேண்டுமானால் அந்தப் பூக்கடைக் காரனிடம் கேட்டுப்பாருங்கள்.

முதலியார் :—நம்பிக்கை ஏற்படவில்லை என்றுசொன்னது யார்? நீ சொல்லுகிறபோது அது உண்மையாகவேதான் இருக்கும்; இதைப்பற்றி பூக்கடைக்காரனைக் கேட்பது சரியல்ல.

உலகநாதன் :—ஆம் மெய்தான்; இனிமேல் மணிவண்ணனை நீங்கள் இங்கே சேர்க்க வேண்டாம்.

முதலியார் :—அவனை ஏன் சேர்க்கிறேன்—என்றார். அதற்கு மேல் சிறிது நேரம் உலகநாதன் அவருடன் பேசிக் கொண்டிருந்த பிறகு அங்கிருந்து புறப்பட்டு தன்னுடைய சிநேகிதர்களைத் தேடிக் கொண்டு சென்றான். சுமார் அரைமைல் தூரம் போனபிறகு, சிநேகிதர் நால்வரும் சிறிது தூரத்தில் முன்னால் சென்றுகொண்டிருந்ததைப் பார்த்து அவர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டான். மணிவண்ணன் தனியாக அவர்களிடம் அகப்படவில்லை யாகை

யால் அவனை அடிக்கவேண்டுமென்ற எண்ணம் நிறைவேறவில்லை. மணிவண்ணன் எவ்வித கெடுதலுமின்றி தன் வீட்டிற்குப் போய் விட்டான். போனவன் மாலை 4 மணிக்கு தன் வீட்டிலிருந்து புறப் பட்டு ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

அங்கு டாக்டர் ராமாராவ் அவனுடைய உடம்பில் சில இடங்களில் ஏதோ மருந்தைத் தடவி அவனை அனுப்பினர். இனி நாம் மணிவண்ணனை விடுத்து, ராமாராவும் அவருடன் இருந்த இன்னொருவரும் என்ன சம்பாஷித்தனர் என்பதை கவனிப்போம்.

ராமாராவ் :—பிறகு என்ன நடந்தது?

மற்றவர் :—நான் அந்த செருப்புச்சுவடுகளைத் தொடர்ந்து கொண்டு போனேனல்லவா. அது கடைசியில் ஒரு வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டது. அந்த வீட்டின் கதவு உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. கதவிலிருந்த ஒரு துளையின் வழியாக உள்ளே பார்த்தேன். உட்புறத்தில் ஒரு விளக்கு எரிந்துகொண் டிருந்தது. உள்ளே மனிதர் இருந்ததும் இல்லாததும் தெரியவில்லை.

டாக்டர் :—அது இன்னொருடைய வீடென்பது உங்களுக்குத் தெரியாதோ?

மற்றவர் :—நான் விஷயம் முழுவதையும் சொல்லுகிறேன் கேளுங்களேன். அப்போது உண்மை தானாகவே உங்களுக்கு விளங் கும். அதன்பிறகு நான் வெளிச்சத்தை அணைத்துவிட்டு நின்று கொண் டிருந்தேன். அப்போது தெருவில் யாரோ ஒருவன் முக்கா டிட்டுக்கொண்டு தயங்கித் தயங்கி நடந்து வந்ததைக் கண்டேன். அவன் வீட்டினருகில் வந்ததும், நான் யாரென்பதையும், அங்கே ஏன் நின்றேன் என்பதையும் கேட்டான். அவனுடைய குரலைக் கேட்டதும் என்னுடைய பழைய சந்தேகம் உறுதிப்பட்டது. அவன் யாரென்று நினைக்கிறீர்கள்? அவன் வேறு யாருமில்லை. அவன் 1936-ம் நம்பர் ஜெவான்.

டாக்டர் : (சந்தோஷத்தோடு) அடேடே! பிறகு என்ன நடந்தது? அவன் உங்களுடைய அடையாளத்தைக் கண்டுகொண் டானா?

மற்றவர் :—அங்கே இருளாயிருந்தபடியாலும், அவன் கேட்ட கேள்வியிலிருந்தும், அவன் என்னை இன்னானென்று தெரிந்து

கொள்ளவில்லை யென்பது நன்றாக விளங்கியது. நான் என்னுடைய குரலை மாற்றிக்கொண்டு, நான் வேறோர் இடத்திற்குப் போவதற்கு பதிலாக அங்கே தவறுதலாக வந்துவிட்டதாய்ச் சொன்னேன். அதன் பிறகு நான் அங்கே நிற்கவில்லை.

டாக்டர் :—அங்கேயே நின்றிருந்தால், வீட்டிற்குள்ளிருந்து யார் வந்து கதவைத் திறக்கிறார்களென்பதைத் தெரிந்துகொண் டிருக்கலாமே.

மற்றவர்:—வீட்டிற்குள்ளிருந்தவர்கள் யாரென்று நாம் தெரிந்து கொள்ளலாமென்பது வாஸ்தவமானாலும், அவர்களும் என்னுடைய அடையாளத்தைத் தெரிந்துகொண் டிருப்பார்கள். நான் அவர்க ளுடைய நடவடிக்கைகளை அக்கறையோடு கவனிக்கிறேன் என்பது உடனே விளங்கிவிடுமல்லவா? அந்தமாதிரி நினைப்பதற்கு இடம் கொடுக்காமல் நான் வேகமாகப் போய்விட்டேன். இரண்டு வீடு களுக்கப்பால் போய் நான் தேடிய வீடு அதுதானோ என்று கவ னிப்பவனைப்போல அந்த வீட்டின் முன்புறத்தில் நின்று கவனித் தேன். ஆனால் அப்போது நான் ஜெவானை கவனித்தேனே ஒழிய எதிரிலிருந்த வீட்டின்மேல் என்னுடைய கவனம் செல்லவில்லை.

டாக்டர் :—அதன்பிறகு அவன் என்ன செய்தான்? வீட்டிற் குள் போய்விட்டானா? இலலாவிட்டால் வெளியிலேயே நின்றபடி உங்களை கவனித்துக்கொண் டிருந்தானா?

மற்றவர் :—அவன் என்னை கவனிக்கவில்லை. அப்போது அவன் கதவைத் தட்டவில்லை. அப்படி இருந்தும் திடீரென்று கதவை யாரோ திறந்தனர். அவன் உள்ளே போனவுடன் கதவு தாளிடப் பட்டது. நான் உடனே இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் கதவி னருகில் சென்று கவனித்தேன். வீட்டிற்குள் அவர்கள் ஏதோ பேசினார்கள். அது என் காதில் தெளிவாகப் படவில்லை. அதனால் நான் அந்த வீட்டை அடையாளம் பார்த்துக்கொண்டு உடனே புறப்பட்டுப் போய், அரங்கசாமி முதலியாரிருந்த தெருவை யடைந்தேன்.

டாக்டர்:—எதற்காக?

மற்றவர் :—காலவயிறவன் பிள்ளை யெனப்படும் ராமனாத னுடைய விஷயமாய் என்னுடைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்குத்தான்.

டாக்டர்:—எந்த வீட்டில் காலவயிறவன் பிள்ளை இருந்தான் என்பதைத் தான் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டதே!

மற்றவர்:—முதலில் நிலைமை அந்த மாதிரிதான் தோன்றியது. ஆனால் அது தவறாயிற்று. நான் மறுபடியும் அதைப்பற்றி யோசனை செய்து பார்த்தேன். சமரபுரி முதலியார் எந்தத் தனிவீட்டில் என்னை சந்தித்தானோ அந்த வீட்டின் கதவை, என்னிடமிருந்த கந்தசாமி வாண்டையானுடைய சாவி திறக்காததைப்பற்றி முதலில் வேறுவிதமாக நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் நிதானமாக யோசித்துப் பார்த்ததில் எனக்கு வேறொரு சந்தேகம் தோன்ற வாரம்பித்தது. பூட்டப்பட்டிருந்த முதல் வீட்டை ஒரு சாவி தற்செயலாகத் திறந்திருக்கவேண்டும். இரண்டாவது வீட்டை நானே பலவந்தமாய்த் திறந்திருக்க வேண்டும் என்றால், வேறொரு வீட்டில் காலவயிறவன்பிள்ளை இருக்கவேண்டுமல்லவா! அதனால் அதற்கடுத்த வீடு எப்படியிருக்கிறது என்று பார்க்க எண்ணி அங்கே நான் போய்ச் சேர்ந்தேன். அந்த வீட்டின் கதவு முன்புறத்தில் பூட்டப்பட்டிருந்தது. அதை என்னிடமிருந்த ஒரு சாவி திறந்தது. நான் உள்ளே புகுந்து பார்த்தேன். எனக்கு எதிரிலேயே வீட்டினுட்புறத்தில் காலவயிறவன் பிள்ளை வந்து வழியில் என்னை சந்தித்தான். அவன் அப்படி திடீரென்று எதிர்ப்படுவானென்று நான் நினைக்கவே இல்லை. அவன் கையில் ஒரு ராந்தலிருந்தது. அந்த வெளிச்சத்தில் அவன் என்னைப் பார்த்துவிட்டு, என் அடையாளத்தைக் கண்டுகொண்டானாகையால், உடனே ராந்தலைக் கீழே போட்டுவிட்டு வேகமாய் உள்ளே ஓடி, அருகிலிருந்த படியின் வழியாக மேலே ஏறிச்சென்றான். உடனே நானும் தொடர்ந்தேன். ஆனால் அவன் மாடியை யடைந்ததும், படியின் முடிவிலிருந்த கதவை அப்புறத்தில் தாளிட்டுக்கொண்டான்.

அதனால் நான் கதவிற்கப்பால் போக முடியவில்லை. அதே சமயத்தில் எனக்குப் பின்னால் யாரோ வந்த காலடி ஓசை கேட்கவே, நான் திரும்பிப் பார்த்தேன். சமரபுரி முதலியாரும், கந்தசாமி வாண்டையானும் வந்துகொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்ததும் நான் இருளாகவிருந்த ஒரு மூலையில் சட்டென்று நின்றுகொண்டேன். ஆனால் அவர்கள் நான் மறைந்துகொண்டதைப் பார்த்துவிட்டனர். உடனே சமரபுரி முதலியார், "அந்த அயோக்கிய நாய் இங்கேயும் வந்திருக்கிறது! அடேய், இப்போது

நீ எங்களிடம் வசமாக மாட்டிக்கொண்டாய். உன்னை இந்த ரிவால்வரால் சுடப்போகிறேன்" என்றான். கந்தசாமி வாண்டையான் தன் கையில் வைத்திருந்த ஒரு மின்சாரக் கைவிளக்கை அழுத்தி நானிருந்த இடத்தில் காண்பித்தான்.

அவர்கள் வந்திருந்த விஷயத்தை முதலியாரின் குரலினால் உணர்ந்துகொண்ட காலவயிறவன் பிள்ளை தாளிடப்பட்ட கதவை உடனே திறந்தான். அந்த ஓசையைக் கேட்ட மற்ற இருவரும் படியின் வழியாக யார் வரப்போகிறார்களென்று பார்க்க, அந்த திக்கில் திரும்பினார்கள். கந்தசாமி வாண்டையானும் கைவிளக்கை படியின் பக்கம் திருப்பிக் காட்டினான்.

அதுவே தப்புவதற்கு சரியான தருணமென்று நான் கருதி சரேலென்று முதலியாரின்மேல் பாய்ந்து ரிவால்வரைப் பிடுங்கிக் கொண்டேன். ஆனால் கந்தசாமி வாண்டையான் தன் கையில் வைத்திருந்த ஒரு முழ நீளமிருந்த விளக்கினால் என் தலையிலடித்தான். அதனால் என் உணர்வு தவற ஆரம்பித்தது. ரிவால்வரைப் பிடித்திருந்த பிடி நழுவியது. முதலியாரும் என் கையிலிருந்து அதைப் பிடுங்கிக்கொண்டான். நான் சமாளித்துக்கொண்டு ஆளுக்கொரு குத்துவீதம் கொடுத்துவிட்டு, வெளியில் ஓட்டம் பிடித்து தெருவை யடைந்த சமயத்தில், தெருவோடு வந்துகொண்டிருந்த யாரோ ஒருவர்மேல் நான் மோதிக்கொண்டேன். அவர் யாரென்று பார்க்க அவர் கமருதீன் பாஷா பயில்வானாகவிருந்தார். அவர் என்னை கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். நான் எவ்வளவோ திமிறியும் அவர் என்னை விடவில்லை. அதே சமயத்தில் உட்புறத்திலிருந்து சமரபுரி முதலியார் வெளியில் ஓடிவந்து அங்கிருந்த நிலைமையை உணர்ந்துகொண்டு, "பயில்வான்! நல்ல சமயத்தில் வந்தீர். நான் இங்கேதானிருக்கிறேன். இவன் வீட்டிற்குள் புகுந்து திருட யத்தனித்தான். நான் இவனைப் பிடிக்க முயன்றேன். என்னை அடித்துத் தள்ளிவிட்டு வெளியில் ஓடிவந்தான். இவனை உள்ளே கொண்டுவாரும்" என்றான். பயில்வான் என்னை உள்ளே இழுத்தான். உடனே நான் யாரென்பதை வெளியிட்டு தப்பித்துக் கொள்ளலாமா அல்லது கூச்சலிட்டு ஜனங்களை வரவழைத்து அவர்களைப் போலீஸாரிடம் ஒப்புவிக்கலாமாவென்று எண்ணினேன். அவர்களைப்பற்றின எல்லா விஷயங்களையும் அறி

வதற்குள்ளாக நான் அம்மாதிரி செய்வது யுக்தமானதல்லவென்று நினைத்து நான் மௌனமாக அவர்களோடு உள்ளே சென்றேன்.

அங்கே நடந்த விஷயங்களை கவனித்துக்கொண் டிருந்த கந்தசாமி வாண்டையான், "இந்தப் பாவி விளக்குகளையெல்லாம் உடைத்துவிட்டான். விளக்கே இல்லாமல் இருளில் என்ன செய்கிறது?" என்றான். பயில்வானுக்கு அந்த வீட்டைக் காட்டக் கூடாது என்னும் எண்ணத்தினாலோ, வீடு காலியாயிருந்ததைப் பார்த்து, அவன் ஏதாவது கேள்வி கேட்பான் என்ற எண்ணத்தினாலோ அவன் அம்மாதிரி யுக்தி செய்தானென்பது நன்றாக விளங்கியது.

முதலியார் பயில்வானிடம், "நீர் தெருவோடு வந்தது நல்லதாயிற்று. எங்கே இந்த அகாலத்தில் போகிறீர்கள்?" என்றான். அதற்கவன், "நான் நாடகத்திற்குப் போய்விட்டு இப்போதுதான் வீட்டிற்குப் போகிறேன். இவன் யாரென்பது தெரிந்ததா?" என்றான். முதலியார், "தெரியவில்லை. இவன் யாரென்பதையும், இவன் எதற்காக இங்கே வந்தானென்பதையும் நாம் விசாரிக்க வேண்டும்" என்றான். உடனே அவர்கள் என்னை இருளிலேயே மாடிக்கு இழுத்துக்கொண்டு போனார்கள்.

பயில்வான் முன்னாலும், நான் அதற்கு அடுத்தாற்போலும், எனக்குப் பின்னால் மற்ற மூவரும் மாடிப்படியின் வழியாய்ப் போனோம். பயில்வான் சற்று உயரமானவன். படியின் முடிவிலிருந்த வாற்சபடி தணிவாயிருந்த தாலையாலும், அங்கே இருளாயிருந்த தாகையாலும், அவனுடைய தலை நிலையில் இடித்தது. அந்த உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் அவன் என்னைப் பிடித்திருந்த பிடியைச் சடக்கென்று விட்டு தனது தலையில் கையை வைத்துக்கொண்டான். நான் அவர்களிடமிருந்து தப்புவதற்கு அதுவே தகுந்த சமயமென்று முடிவுசெய்து கொண்டேன். படிக்கட்டு 'ப' என்னும் எழுத்தைப்போல் அமைந்திருந்தது. 'ப' வின் மூலையில், பின்னாலிருந்த மூவரும் வந்துவிட்டனர். நான் உடனே மேலிருந்து அவர்களுக்குப் பின்னால் கீழே தைரியமாகக் குதித்து வேகமாய் ஓடலானேன். அப்படி நடக்குமென்று அவர்கள் எதிர்பார்க்கவில்லையாகையால், தாம் என்ன செய்வதென்பதை யறியாமல் பிரமித்துப் போயினர். அவர்கள் சிறிது தூரம் வருவதற்குள் நான் வேகமாகத்

ணிக்க விரும்பினேன். யோகீசுவரர் இங்களை வெளியில் அனுப்பின பிறகு வேலைக்காரனையும் உங்கள் பின்னாலேயே அனுப்பி நீங்கள் யாரென்பதை கவனித்து வரச்சொன்னார். அதை நான் மறைவிலிருந்து கேட்டுக்கொண் டிருந்தேன். அதன் பிறகு வீட்டிற்குள் ஆராய்ந்து பார்த்ததில் நான் தேடிய இரண்டு மனிதர்களும் காணப்படவில்லை. அவர்கள் காணாமல் போனதைப்பற்றி நான் ஆச்சரியமடைந்தேன்.

டாக்டர்:—அவர்கள் காணாமலா போய்விட்டார்கள்! ஒரு வேளை விடியற்காலையிலேயே அவர்கள் அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்களோ என்னவோ?

மற்றவர்:—அப்படித்தா னிருக்கவேண்டு மென்று நானும் முடிவு செய்துகொண்டு, வீட்டின் கீழ்பாகத்தில் புகுந்து ஆராய்ந்தேன். அங்கே ஒரு மேஜையில் சமரபுரி முதலியாருடைய கூட்டாளியான கந்தசாமி வாண்டையான் எழுதிய கடிதமொன்று அகப்பட்டது. அதில் சுமார் 6 மாதங்களுக்கு முந்திய தேதி போடப்பட்டிருந்தது. அது எனக்கு அனுகூலப்படுமென்று கருதி அதை எடுத்து வைத்துக்கொண்டு, உபயோகப்படுத்தி கந்தசாமி வாண்டையானுக்கும், யோகிக்கும் உள்ள சம்பந்தத்தை யறிய எண்ணி, அதன் தேதியை மாத்திரம் மாற்றிய பிறகு நேராக யோகியிடம் போய், அதை அவரிடம் கொடுத்து, என்னை வாண்டையான் அனுப்பியதாய்ச் சொன்னேன். அவன் அதற்கு மறுமொழி கொடுத்தான். விசேஷ மெதுவுமில்லை யென்றும், காலவயிறவன் பிள்ளையை வெளியில் விடாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படியும் அதில், எழுதப்பட்டிருந்தது. அதனால் கந்தசாமி வாண்டையா னிருந்த இடத்திலோ, அல்லது, அவன் மூலமாக வேறு இடத்திலோ காலவயிறவன் பிள்ளை யிருக்கவேண்டு மென்பது தெளிவாயிற்று.

நான் உடனே அங்கிருந்து வெளியில் போய், கந்தசாமி வாண்டையானுடைய வீட்டை யடைந்தபோது, அவன் அடுத்த வீட்டுக்காரனிடம், தான் அடுத்த தெருவுவரையிலும் போய் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போனான். அடுத்த தெருவிலேயே யோகியும் இருந்தபடியால் அவன் அங்கேதான் போகிறானென்று நான் யூகித்துக் கொண்டேன். தெருவுக் கதவு பூட்டப்பட் டிருந்ததானாலும், நான் என்னிடமே வைத்திருந்ததான, வாண்டையானுடைய கொத்துசாவியிலிருந்த ஒரு சாவி அதைத் திறந்தது. அத்

னால் அவன் அந்தப் பூட்டிற்குப் புதிதாக சாவி தயார்செய்துகொண்டிருக்கிறானென்ற விஷயம் எனக்கு விளங்கியது. வீட்டிற்குள் காலவயிறவன் பிள்ளை காணப்படவில்லை. அங்கே சமரபுரி முதலியார் என்ற கையெழுத்துடனும், சின்னசாமி யோகீசுவரர் என்ற கையெழுத்துடனும் பல கடிதங்களகப்பட்டன. அக் கடிதங்களில் எழுதப்பட்டிருந்த விஷயங்கள், சாதாரணமானவையா யிருந்தனவானாலும், அவைகளிலிருந்து ஒரு முக்கியமான விஷயம் வெளியாயிற்று.

டாக்டர்:—(ஆவலோடு) என்ன விஷயம்?

மற்றவர்:—சமரபுரி முதலியாருடைய கையெழுத்தும், யோகியின் கையெழுத்தும் ஒரே மாதிரியா யிருந்தன.

டாக்டர்:—அது தற்செயலான ஒற்றுமையா யிருக்கலாம்.

மற்றவர்:—அப்படியல்ல. இரண்டு ஆசாமிகளுடைய கையெழுத்துகளும் ஒரே மனிதரால் எழுதப்பட்டவை போலவே இருந்தன. ஆகவே, சமரபுரி முதலியாரே சின்னசாமி யோகியோ என்னும் சம்சயம் உண்டாயிற்று.

டாக்டர்:—(வியப்புடன்) நீங்கள் சொல்வது பெரிய வேடிக்கையா யிருக்கிறதே. சரி; அதன் பிறகு என்ன செய்தீர்கள்?

மற்றவர்:—நான் வெளியில் போய், வீட்டின் கதவை முன் போலவே மூடிப் பூட்டினேன்.

டாக்டர்:—கடிதங்களை என்ன செய்தீர்கள்? அந்த இடத்திலேயே அவைகளை வைத்துவிட்டீர்களா?

மற்றவர்:—யோகியுடைய கையெழுத்தோடிருந்த கடிதமொன்றையும், சமரபுரி முதலியாருடைய கையெழுத்தோடிருந்த கடிதமொன்றையும் மாத்திரம் எடுத்துக்கொண்டு, மற்றவைகளை அங்கேயே வைத்துவிட்டு வீட்டைப் பூட்டியபின் நான் ரயில் ஸ்டேஷனை நோக்கிப் போனேன். இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நான் வேறொரு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

டாக்டர்:—என்ன விஷயம்?

மற்றவர்:—நான் இரண்டு காரணங்களை யுத்தேசித்து இந்த ஊருக்கு வந்ததாயும், மூன்றாவதாக, வீடுகள் கொளுத்தப்பட்ட மர்மமும் சேர்ந்துகொண்டதென்றும் சொன்னேனல்லவா.

டாக்டர்:—(தலையை அசைத்து) ஆமாம். முதலாவது சின்னசாமி யோகியைப் பார்க்க வந்ததாய்ச் சொன்னீர்கள். இரண்டாவது விஷயத்தை நீங்கள் என்னிடம் வெளியிடவில்லை.

மற்றவர்:—அந்த இரண்டாவது காரணத்தை உத்தேசித்துதான் நான் அங்கே போனேன். நான் இந்த ஊருக்கு என்ன காரியமாக வந்தேனோ அதை கவனிக்காமல் அசட்டையாக விட்டுவிட எனக்கு மனமில்லை. அது என்ன விஷயமென்றால், எனக்கு நாராயணசாமி முதலியார் என்று ஒரு சிநேகித ரிருக்கிறார். அவருக்கு ஒரு பெண் இருக்கிறது. ஒருவன் அவரை ஏமாற்றி அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு, பெண்ணையும் அழைத்துக்கொண்டு மறைந்துவிட்டான்; கலியாணம் செய்துகொண்டவன் தன்னுடைய பெயர் சாமிநாதன் என்று சொல்லிக்கொண்டான். அவனோடு வந்தவர்கள் அவனுடைய தகப்பனாரென்றும், அவனுடைய சிறிய தாயாரென்றும், அம்மானென்றும், அத்தை பிள்ளையென்றும் சொல்லிக்கொண்டார்களாம். அந்தப் பையன், தான் டில்லியில் பெரிய உத்தியோகத்தி லிருப்பதாய்ச் சொன்னானாம். அதை நாராயணசாமி முதலியார் நம்பிவிட்டார்.

டாக்டர்:—பெண்ணின் தாயார் தகப்பனார், தங்களுடைய மனிதர் யாரையும் கூட அனுப்பாமல் பெண்ணை மாத்திரம் எப்படி அவர்களுடன் தனியாக அனுப்பினார்கள்?

மற்றவர்:—தனியாக அனுப்பவில்லை. பெண்ணின் அம்மானையும் கூட அனுப்பினார்கள்; எல்லோருக்காகவும் பகலிலேயே டிக்கட்டுகளை வாங்கிவிட்டதாக சாமிநாதன் தெரிவித்தான்; ரயில் புறப்பட்ட பிறகு, வழியனுப்ப வந்தவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

எல்லோரும் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டே போனபோது மாப்பிள்ளையின் தகப்பனார் ஒரு ஜங்ஷனில் பெண்ணின் அம்மானுக்கு ஏதோ பலகாரம் கொடுத்தாராம். அதன்பிறகு இருவருமாகப் பேசிக்கொண்டே பிளாட்பாரத்திலிருந்த ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்திருந்தார்களாம். உடனே பெண்ணின் அம்மானுக்கு ஸ்மரணை தப்பிப் போய்விட்டதாம். அவர் மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தபோது, தாம் மாத்திரம் அந்த பிளாட்பாரத்தில் அதே பெஞ்சியில் தனியாய் உட்கார்ந்திருந்ததையும், எதிரில் நின்ற ரயில் காணப்படவில்லையென்றும் அறிந்து உடனே

பதறிப்போய், அந்த ரயில் எப்போது புறப்பட்டுப் போனதென்பதை அங்கிருந்த சில போர்ட்டர்களிடம் விசாரித்தாராம். அவர் எந்த வண்டியைப்பற்றி விசாரித்தாரோ, அந்த வண்டி புறப்பட்டுப் போய் சுமார் 12 மணி நேரத்திற்குமேல் ஆய்விட்டதாக அவர்கள் சொன்னார்களாம். உடனே அவர் ரயில் ஸ்டேஷனிலிருந்த தந்தியாபீஸிற்குப் போய் நடந்த விஷயத்தைப்பற்றி நாராயணசாமி முதலியாருக்கு ஒரு தந்தியனுப்பிய பிறகு தான் மயக்கமடைந்தவுடன் தம்மை மற்றவர்கள் தனியாய் விட்டுவிட்டுப் போகவேண்டிய காரணமென்னவென்று யோசித்தாராம். ஒருவேளை தாம் மயக்கமடைந்த சமயத்தில் வண்டி புறப்பட ஆரம்பித்ததால் அவர் உடனே வண்டியிலேறி மற்றவர்களுடன் அடுத்த ஸ்டேஷனிலிறங்கி திரும்பி வரலாமென்று நினைத்து அந்த திக்கிலிருந்து எப்போது வண்டி வருமென்று விசாரிக்க, அந்த நிமிஷம் வரையில் பல வண்டிகள் வந்து போய்விட்டதாய்த் தெரிந்துகொண்டார். அதனால், தம்மை அவர்கள் வேண்டுமென்றே விட்டுவிட்டுப் போயிருக்கலாம், அல்லது, அடுத்த ஸ்டேஷனில் தமக்காகக் காத்திருக்கலாம் என்று நினைத்து அடுத்த வண்டியில் ஏறிச் சென்று அடுத்த ஸ்டேஷனில் பார்க்க, அங்கு யாரும் காணப்படவில்லை. அதனால் தம்மை வேண்டுமென்றே அவர்கள் விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று கருதி அவர் சென்னை ரயில் ஸ்டேஷனுக்குத் தந்தி அனுப்பினார். அங்கே சிறிய ரயில் (எஸ். ஐ. ஆர். வண்டி) போய், பெரிய ரயில் (எம். எஸ். எம்.) வண்டியில் டில்லிக்குப் போகிறவர்கள் ஏறவேண்டுமாதலால், பெரிய ரயில் ஸ்டேஷனுக்கு தந்தி யனுப்பினார். அதில் இன்னின்ன அடையாளமுள்ளவர்கள் டில்லிக்குப் போவதாயும், அவர்களை அங்கேயே நிறுத்தி வைக்கும்படியாயும் தெரியப்படுத்தியிருந்தார்.

அதன் பிறகு அவர் சென்னையையடைந்து பார்க்க, அங்கே அந்த அடையாளமுள்ள மனிதர்கள் யாருமே வரவில்லையென்பதை ஸ்டேஷன் அதிகாரிகளிடமிருந்து தெரிந்துகொண்டார். அதனால் அவர் நிரம்பவும் கலவரமடைந்து, பெண்ணின் தகப்பனாருக்கு மறுபடியும் தந்தி அனுப்பினார். பெண்ணின் தகப்பனாரும் வந்து சேர்ந்தார். இருவரும் பல நாட்கள் அந்த ஸ்டேஷனிலேயே தங்கி பெண்ணை அழைத்துச் சென்றவர்கள் வருவார்களோ என்று பார்த்துக்கொண்டிருந்தது வீணாயிற்று. ஆகவே, அவர்கள் நடந்த

விஷயத்தை வெளியிட்டால் தங்கள் குடும்பத்திற்கு கெட்ட பெயருண்டாகும் என்றெண்ணி ஊருக்குத் திரும்பி வந்தனர்.

இந்த சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பிறகு தற்செயலாய் நாராயணசாமி முதலியாரிடம் போயிருந்தபோது, நான் தகவல்களைத் தெரிந்துகொண்டேன். நான் அந்த மோசக்காரர்களைக் கண்டுபிடிப்பதாய் அவருக்கு வாக்குறுதி செய்து கொடுத்த பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனேன். கலியாணப் பெண் புறப்பட்டு அந்த மோசக்காரர்களுடன் சென்ற தினத்தில் எந்தெந்த ஊருக்கு எத்தனை டிக்கட்டுகள் விற்கப்பட்டனவென்னும் கணக்கை ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேட்டு வாங்கிக்கொண்டேன்; அன்று டில்லிக்கு ஒரு டிக்கட்டுகூட விற்கப்படவில்லையென்பது தெரிந்தது. அன்றைய தினம் பகலிலேயே பலர் பல இடங்களுக்கு டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டிருக்கலாமாதலால் அந்த மோசக்காரர்கள் எந்தெந்த ஊருக்கு டிக்கட்டுகள் வாங்கினார்களென்பதை டிக்கெட்டு விற்கும் குமாஸ்தாவால் சொல்ல இயலவில்லை.

அதனால் அந்தத் தகவலை நானே கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. அந்த மோசக்காரர்கள் கும்பலாகப் பிரயாணம் செய்ததால், அவர்கள் சிறிய ஸ்டேஷனில் இறங்கி, தங்களைப்பற்றி ஸ்டேஷன் மாஸ்டர் முதலியோர் பின்னால் தகவல் கொடுக்கக்கூடிய விதமாக நடந்துகொண்டிருக்க மாட்டார்களென்றும், அநேகமாய் ஒரு பெரிய ஸ்டேஷனிலிறங்கி கும்பலோடு கும்பலாய்ப் போயிருப்பார்கள் என்று முடிவு செய்துகொண்டு, டிக்கட்டுகள் விற்ற கணக்கைப் பார்த்தேன். அதில் பல பெரிய ஊர்களுக்கு டிக்கட்டு விற்கப்பட்டிருந்த விஷயம் காணப்பட்டதாகையாலும், சுமார் பத்து ஊர்களே இடையில் இருந்தனவாதலாலும், ஒவ்வோர் ஊரிலும் விசாரிக்க எண்ணினேன். அந்த ஸ்டேஷன்களில் ஜனங்கள் யாரார் இறங்குகிறார்கள், அல்லது, ஏறுகிறார்களென்பதை ஸ்டேஷன் அதிகாரிகள் சொல்லமுடியாதாகையால் நானிருந்த இடத்திலிருந்தே தந்தி மூலமாய் எல்லோரையும் விசாரிக்க முடியாமலிருந்தது. அதனால் நான் என்னுடைய மோட்டார்வண்டியில் புறப்பட்டேன். ஒவ்வோர் ஊருக்கும் வண்டி செல்லக்கூடிய ரஸ்தா இருந்ததாகையால், ஒவ்வோர் ஊருக்கும் போய் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தவர்களிடம் கேட்டுப் பார்த்தேன்; அது பயன்படாமல் போகவே,

கடைசியாக இந்த ஊருக்கு வந்தேன். வந்தபின் நடந்த விஷயங்களெல்லாம் உங்களுக்கும் தெரியும்.

நான் இந்த ஊர் ரயில் ஸ்டேஷனுக்குப் போனதாய்ச் சொன்னேனல்லவா? போய் அந்த மோசக்காரர்களைப்பற்றி விசாரித்தேன். ஒரு மாதத்திற்கு முன்பு 6 ஆசாமிகள், இன்னும் தூரத்திலுள்ள வேறோர் ஊருக்கு டிக்கட்டுகள் வாங்கியிருந்தனரானாலும் அவர்கள் டிக்கட்டுகளைத் கொடுத்துவிட்டு இந்த ஊரில் இறங்கிப் போனதாயும், அதனால் அவர்களை டிக்கட் குமாஸ்தா கவனித்ததாயும், அவர்கள் ஒரு ஜட்கா வண்டியில் போனதாகவும் சொன்னார்கள். ஜட்கா வண்டிக்காரனுடைய அடையாளம் அவருக்குத் தெரியுமாவென்று நான் கேட்டதற்கு, அப்போது ஏராளமான ஜட்கா வண்டிகள் நின்றமையால் எந்த வண்டியில் ஏறினார்களென்பதைத் தாம் சரியாக கவனிக்கவில்லை யென்றும் சொன்னார்கள். நான் தேடும் ஆசாமிகள் அவர்களே என்பது நன்றாக விளங்கியது. தாங்கள் செல்லுமிடத்தை, புறப்பட்ட இடத்தில் யாருமறியக் கூடாது என்ற எண்ணத்துடன் வேறோர் இடத்திற்கு டிக்கட் வாங்கிவிட்டு, இந்த ஊரில் இறங்கியிருக்க வேண்டுமென்றும், அதனால் அவர்கள் இந்த ஊரில் இருப்பவர்கள் என்றும் நான் யூகித்துக் கொண்டேன். நாராயணசாமி முதலியாரிருக்கும் ஊரிலிருந்து அவர்கள் புறப்பட்டபோது, பெண்ணின் அம்மான் உள்பட எட்டு ஆசாமிகள் இருந்தனர்.

பெண்ணின் அம்மானை அவர்கள் விட்டுவிட்டபடியால், மிகுதி ஏழு ஆசாமிகள் இருக்கவேண்டுமல்லவா? ஆனால் அறுவர்தானே இருந்தார்கள்; அதனால் யாரோ ஒரு மனிதர் நடுவில் இறங்கிப் போயிருக்க வேண்டுமென்று நான் எண்ணினேன். அது யாரென்பதை அறியும்பொருட்டு அடையாளங்களை யெல்லாம் அவரிடம் கேட்க, கலியாணப் பெண்ணைத் தவிர மற்றவர்களெல்லோரும் வந்ததாய்த் தெரிந்தது. அதைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன். வழியிலேயே கலியாணப் பெண்ணின் நகை முதலியவைகளைக் கழற்றிக்கொண்டு வண்டியிலிருந்து தள்ளிவிட்டிருப்பார்களோவென்று நான் சம்சயித்தேன்.

அதன் பிறகு ஜட்கா வண்டிக்காரர்களொவ்வொருவரையும் விசாரித்ததில், எவரும் தங்களுக்கு அந்த விஷயம் நினைவிற்கு வர

வில்லையென்று கூறவே, என்னால் அதற்குமேல் எதுவும் செய்ய முடியாது என்பது விளங்கியது. ஆகையால் நான் உடனே ஊருக்கு வந்தேன். இந்த ஊருக்கு வந்த அறுவரும் யாரென்பதையும், எங்கிருக்கிறார்களென்பதையும் கண்டுபிடிக்க வகை என்னவென்று எண்ணமிட்டேன். அதன்பொருட்டு சின்னசாமி யோகியின் வீட்டின் பக்கம் சென்று கவனிக்க ஆரம்பித்தேன்.

மாலையில் அவன் எங்கேயோ வெளியில் போய்விட்டான். அவன் எப்படியும் திரும்பி வருவானென்று எண்ணி நான் அங்கேயே இருந்தேன். ஆனால் அவன் வெகுநேரம் வரையில் வரவில்லையாகையால், நான் துணிந்து வீட்டிற்குள் நுழைந்து, வீட்டின் மேல்பாகத்தை ஆராயவேண்டுமென்று முடிவு செய்துகொண்டேன். அப்போது மணி எட்டரை யிருக்கலாம். அவன் எந்த நிமிஷம் வந்துவிடுவானோ வென்ற அச்சம் எனக்குத் தோன்றியதானாலும், நான் துணிந்து அந்த வீட்டிற்குள் நுழைந்து சாமர்த்தியமாய் வேலைக்காரனுடன் பேச்சுக்கொடுத்து, அவனைத்தவிர வீட்டில் யாருமில்லையென்பதை அறிந்துகொண்டேன். அவனைத் தந்திரமாக மாடிக்கு அழைத்துப்போய் எப்படியாவது அனுப்பிவிட்டுத் தனியாயிருந்து ஆராய வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் அங்கேயே யோகிக்காகக் காத்திருப்பதாயும், என்னை கந்தசாமி வாண்டையான் அனுப்பியதாயும் ஒரு பெரிய பொய்யைச் சொன்னேன். அதை அவன் நம்பிவிட்டானானாலும், என்னைத் தனியாக மாடியில் விட்டுவைக்க அவன் விரும்பவில்லையென்பது அவன் என்னுடன் பேசியதிலிருந்து தெரிந்தது. ஆகவே, அவன் சற்று அஜாக்கிரதையாயிருந்த சமயத்தில் நான் அவன்மேல் பாய்ந்து அவனுடைய கைகால்களைக் கட்டி, வாயில் துணியை அடைத்து தரையில் உருட்டிவிட்டு உடனே ஆராய வாரம்பித்தேன். அப்போது தடாரென்ற ஓசையுடன் தெருக்கதவு மூடித் தாளிடப்பட்டது கேட்டது. அதனால் நான் எச்சரிப்படைந்துவிட்டேன். யோகி திரும்பி வந்திருக்க வேண்டுமென்று நான் சந்தேகித்து, அருகிலிருந்த மேஜையினடியில் வேலைக்காரனைப் படுக்க வைத்துவிட்டேன். மேஜையினடியில் இருள் சூழ்ந்துகொண்டிருந்ததாகையால், அவன் இருந்தது வெளியில் தெரியவில்லை. அவன் தன் உணர்வை இழந்து அசைவற்றுக் கிடந்தது எனக்கு சௌகரியமாயிருந்தது. நான் சாதுவாய் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து

கொண்டு, யோகீசுவாருடைய வரவை எதிர்பார்த்திருந்தேன்— என்று கூறி அதற்குமேல் நேர்ந்த அபாயங்களையும், அவன் தம்மை மாடியறையில் அடைத்துவிட்டுப்போன வரலாற்றையும், அங்கிருந்து தாம் தப்பித்துக்கொண்டு வெளியில் வந்த விஷயத்தையும், மெத்தைப் படிகளிரண்டும் அப்புறப்படுத்தப்பட்டிருந்ததையும், வீட்டின் கீழ்பாகத்தில் நெருப்பு எரிந்தது போன்ற ஒருவித நாற்றமும் புகையும் வந்த வரலாற்றையும் விவரமாகக் கூறினார்.

அந்த வரலாற்றைக் கேட்ட டாக்டர் ராமாராவ் வியப்புடன், "அதன்பிறகு என்ன செய்தீர்கள்?" என்று வினவினார்.

மற்றவர்:—அதன் பிறகு எப்படிக் கீழே இறங்குவதென்பதைப் பற்றி நான் யோசித்தேன். மாடியில் கயிறு முதலிய வஸ்து எதுவும் காணப்படவில்லை. துணிகளைக் கிழித்து கயிற்றைப்போல் செய்துகொள்ள துணிகள் அகப்படவில்லை. அதனால் எனக்கு உதவக்கூடிய பொருள் ஏதாவதிருக்கிறதா யென்று மாடி முழுதும் மற்றோர் முறை சுற்றிப்பார்த்தேன். அப்போது திடீரென்று எனக்கு ஒரு யுக்தி தோன்றியது. மாடியில் ஓர் அறையில் வாசற்படியை மறைத்துக்கொண்டிருந்த ஒரு பீரோ என் கண்ணில் தென்பட்டது. அது சுமார் 9 அடி உயர மிருந்ததாகையால் அதில் கதவுகள் எப்படிப் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று கவனித்தேன். ஒவ்வொரு கதவும் மூன்று கீல்களால் வாசற்காலோடு இணைக்கப்பட்டிருந்தது. அதை எப்படிப் பிரித்து எடுப்பது என்று யோசித்துப் பார்த்தேன். என்னிடம் ஒரு சிறிய கத்தி இருந்தது. அதை நான் திருப்புளியாக உபயோகித்து ஆணிகளை வேகமாகக் கழற்றினேன். கதவு தனியாக வந்துவிட்டது. அதன் பிறகு அந்த அறையில் மின்சாரம் வருவதற்காக அமைக்கப்பட்டிருந்த கம்பிகளை யெல்லாம் அறுத்தெடுத்து, குறுக்கிலும் நெடுக்கிலுமாய் இரண்டு மூன்று இடங்களில் கதவைச் சுற்றி கட்டிவிட்டு கதவைத் தூக்கிக்கொண்டு படியிருந்த இடத்திற்கு வந்தேன். அது இலேசான கதவாதலால் அதிக பளுவில்லாமலிருந்தது. எனவே நான் அதை சுலபமாகத் தூக்கிக்கொண்டு போய் தளத்திலிருந்த துவாரத்தின் வழியாய் அதை இறக்கி ஒரு சுவரோரமாக சார்த்தினேன். அவ்வளவு உயரமான கதவாயிருந்தும், அது தளத்தின் மேல்மட்டத்திலிருந்து ஓர் அடி கீழே தணிந்திருந்தது. அப்படி தரை அதிக ஆழத்திலிருக்குமென்பதை உத்தேசித்தே, அறையின் வாசற்படிக் கதவுகளை யெடுக்காமல், நான்

பீரோக் கதவை யெடுத்தேன். அதன் பிறகு நான் அந்தக் கதவின் மேல் காலை வைத்துக் கீழேஇறங்கலானேன். படிகளாய் உபயோகப்படுத்த கம்பிகளை ஏற்கனவே கட்டியிருந்தேனாதலால், அவைகளின் வழியாகக் கீழே மட மடவென்று இறங்கித் தரையை யடைந்துவிட்டேன். அப்போது கீழ்பாகத்தில் புகை சூழ்ந்திருந்தமையால் கண்களைத் திறக்க முடியவில்லை. அக்கினி ஜ்வாலையும் வீசியது. அருகிலிருந்த சில சாமான்கள் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன.

என்னை அந்த வீட்டில் விட்டு, வீட்டிற்கு தீ வைத்தது போலவே, தன்னுடைய விரோதிகளையெல்லாம் சமரபுரி முதலி சமயம் வாய்த்தால் கொளுத்திவிடுவான் என்பது அதிலிருந்து நன்றாக விளங்கியது. அரங்கசாமி முதலியார் வீட்டிலும், காமாட்சி நாயக்கர் வீட்டிலும் பகைமையினாலேயே நெருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நான் கருதி முன்பக்கம் போக முயன்றேன். அப்போது திடீரென்று காலில் சுறுக்கென்று ஏதோ தைத்தது. தேள்தான் கொட்டிவிட்டதோ என்று நான் கீழே குனிந்து பார்க்க, ஏராளமான சப்பாத்தி இலைகள் வழியெல்லாம் போடப்பட்டிருந்தன. அவ்வளவு சீக்கிரத்தில் யோகிக்கு எங்கிருந்து சப்பாத்தி கிடைத்திருக்குமென்று நினைத்து ஆச்சரியமடைந்து நான் அப்பால் போக ஒரு தந்திரம் செய்தேன். நான் வந்த வழியே திரும்பிப்போய், சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பீரோக் கதவை எடுத்து வந்து சப்பாத்தியின்மேல் போட்டு கதவின்மேல் கால்களை வைத்து நடந்துபோய் விட்டேன். அதன்பிறகு நடைவாசற்படியை யடைந்தேன். அங்கே கதவு மூடி வைக்கப்பட்டிருந்தது. நான் உடனே அதன்மேல் கையை வைக்க, என் கையில் சுரீரென்று மின்சாரம் தாக்கியது. அதனால் அந்தக் கதவு ஏதோ உலோகத்தினால் செய்யப்பட்டோ, மரத்தினால் கதவைச் செய்து அதன்மேல் உலோகத்தினால் செய்யப்பட்ட தகடு மூடப்பெற்றோ இருந்ததாகையால், அதன்மேல் மின்சாரம் பரவி இருந்ததென்பது நன்றாக விளங்கியது. கீழ்பாகத்திலிருந்து, மேல்பாகத்திற்குச் செல்லும் கம்பி நடுவில் அறுக்கப்பட்டிருந்ததாலும், கீழ்பாகத்தில் அப்போதும் மின்சாரம் வந்துகொண்டிருக்க வேண்டுமென்பதும் தெரிந்தது. அருகில் சுவரில் மின்சார விளக்கை ஏற்ற உபயோகப்படுத்தும் பொத்தானென்று இருக்கவே, நான் அதை அழுத்தினேன். உடனே அங்கே விளக்கெரிந்தது. நான் மறுபடியும் பீரோக்

கதவை சப்பாத்தியின்மேலிருந்து இழுத்துவந்து, அதனால் மின்சாரம் பாய்ந்துகொண்டிருந்த கதவைத் தள்ளிப்பார்த்தேன். மரத்தின் வழியாக மின்சாரம் செல்லாதாகையால், நான் அதை உபயோகித்தேன். நல்ல வேளையாகக் கதவு திறந்துகொண்டது. கதவிற்கப்பால், நடையில் ஒரு பயங்கரமான காட்சி தென்பட்டது. அங்கே நாலா பக்கங்களிலிருந்தும் மெல்லிய இரும்புக்கம்பிகள் நடுவில் மார்பளவு உயரத்தில் சந்தித்தன. அதில் ஒருரிவால்வர் வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து தெருக்கதவிற்குப் பலகம்பிகள் சென்றன. அதன் கருத்து உடனே எனக்கு விளங்கிவிட்டது. வெளியிலிருந்து எவரேனும் உள்ளே வருவதற்காகக் கதவைத் திறந்தால் உடனே அந்த ரிவால்வர் வெடித்து எதிரிலிருப்பவருடைய மார்பில் பாய்ந்துவிடும் என்பது விளங்கியது. எனவே, நான் ஜாக்கிரதையாக அதற்கருகில் போய் அந்த ரிவால்வரை கம்பிகளிலிருந்து எடுத்து என்னுடைய சட்டைப்பையில் வைத்துக்கொண்டு தெருக்கதவைத் திறந்துகொண்டு வெளியில் போய்விட்டேன். அப்போது தெருவில் ஜனப்போக்குவரத்து காணப்படவில்லை. வீடு முழுதும் நன்றாகநெருப்பு பிடித்துக்கொண்டபிறகே அந்தச் செய்தி மற்றவருக்குத் தெரியுமாகையால், அதுவரையில் அங்கே யாரும் வரமாட்டார்கள் என்று கருதி நான் தெருவின் இரண்டு பக்கங்களிலும் பார்த்தேன். யோகி காணப்படவில்லை. யோகியோடு அவருடைய வேலைக்காரனும் மறைந்துவிட்டான். அவர்களிருவரும் அருகில் எந்த வீட்டின் திண்ணையிலாவது உட்கார்ந்து, தங்கள் வீட்டை கவனித்துக்கொண் டிருக்கிறார்களோ வென்று பார்த்தேன். கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் எங்கும் யாரும் காணப்படவில்லை. நான் உடனே புறப்பட்டு விசையாக நடந்து தெருவின் கோடியை யடைந்தேன். அங்கே ஒரு மாடி வீடிருப்பதையும், அந்த வீட்டிற்குள் டெலிபோன் கம்பிகள் போவதையும் பகலிலேயே நான் பார்த்திருந்தேன். ஆகவே, நான் அந்த வீட்டுக்காரரின் அநுமதியைக் கேட்டு டெலிபோனண்டை போய், நெருப்பணைக்கும் இயந்திரமுள்ள ஆபீஸுக்கு தகவல் தெரிவித்துவிட்டு,அங்கிருந்து புறப்பட்டுகுத்துச்சண்டை நடந்த மைதானத்தினருகில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கு சமரபுரி முதலியார் போயிருக்கலா மென்ற நினைவினால் சிறிது நேரத்தில் அங்கேபோய்ச் சேர்ந்தேன். உள்புறத்தில் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. நான்

உயிருடன் மறுபடியும் வெளிப்படப்போவதில்லையென்னும் உறுதி சமரபுரி முதலியாருக்கு இருக்கு மாகையால், அவர் கொஞ்சமும் பயப்படாமல் தம் கட்டிடத்தி லிருப்பார் என்று நான் எதிர்பார்த்தேன். கட்டிடத்திற்கு சிறிது தூரத்திற்கு முன்னால் இருந்த மதில் கதவு உட்புறம் பூட்டப்பட்டிருந்து. ஆயினும் நான் என்னுடைய கொத்துசாவியை மறுபடியும் உபயோகிக்க, பூட்டு திறந்துகொண்டது. உடனே அதை விலக்கிக் கையிலெடுத்துக்கொண்டு கதவைத் திறந்து, ஓர் ஆள் புகத்தேவையான வழிசெய்துகொண்டு, பூட்டை கதவின் கம்பி யொன்றில் மாட்டிவிட்டு ஓசை செய்யாமல் உள்ளே போய், கட்டிடத்தினருகில் நெருங்கினேன். எதிரில் ஒரு ஜன்னலிருந்தது. உட்புறத்தில் விளக்கின் வெளிச்சம் இருந்தது ஜன்னலால் எனக்குத் தெரிந்தது. நான் அந்த ஜன்னலினருகில் போய், உள்ளே யாரிருந்தார்க ளென்பதைப் பார்க்க விரும்பினேன். ஜன்னலுக்கு சுமார் ஐந்து கஜத்திற்கு இப்பால் நான் போய்க்கொண்டிருந்த பொழுதே திடீரென்று விளக்கு அணைக்கப்பட்டது. உடனே இருள் சூழ்ந்துகொண்டது. நான் வந்ததை உள்ளே இருந்தவர் எவரேனும் பார்த்து விளக்கை யணைத்துவிட்டு, இருளிலிருந்தே என்னைப் பார்க்கிறார்களோ வென்று நினைத்துக் கொண்டேன்.

ஆகவே, நான் ஜன்னலண்டை போய்க் கீழே உட்கார்ந்து மறைந்துகொண்டு உள்பக்கத்தில் எந்த விதமான ஓசை கேட்கிறதென்று கவனித்தேன். உள்ளே யாரோ தலையணையைத் தட்டிய ஓசை கேட்டது. அவர் ஓயாமல் ஐந்துநிமிஷ நேரம் தட்டவே, எனக்கு சந்தேகம் தோன்றவாரம்பித்தது. வேறு எந்த ஓசையையோ மறைக்கும் எண்ணத்துடன் அவர் அப்படிச் செய்கிறாரோவென்று நான் சந்தேகித்தேன். அப்போது சிறிது தூரத்தில் காணப்பட்ட வாசற்படியின்மேல் என் கவனம் சென்றது. அதுவரையில் மூடப்பட்டிருந்த கதவு மெதுவாகத் திறந்துகொண்டது நன்றாகத் தெரிந்தது.

கதவின் தாளைத் திறக்கும் ஓசையோ, அல்லது, கதவைத் திறக்கும் ஓசையோ, என் காதில் விழாமலிருப்பதற்காகவே, உள்ளேயிருந்தவன் தலையணையைத் தட்டினானென்று நான் யூகித்துக்கொண்டேன். ஆகவே, அந்தக் கட்டிடத்தில் ஓசை செய்தவனொருவன், கதவைத் திறந்தவனொருவன். ஆக இரண்டு பேர்களாவது இருக்கவேண்டுமென்பது நிச்சயப்பட்டது. என்னை ஏமாற்ற

நினைத்த அவர்களை நான் ஏமாற்றிவிட எண்ணி கீழே குனிந்தபடி வாசற்படியிருந்த திக்கிற் கெதிர்திக்கில் வேகமாகப்போய் கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டு பின்புறத்திற்குப் போனேன். கதவைத் திறந்த மனிதன், நான் இல்லாததால், என்னைத் தேடிக்கொண்டு பின்பக்கம் வருவானென்று எதிர்பார்த்து எங்கேயாவது மறைந்து கொள்ள வேண்டுமென்று நினைத்து சுற்றுமுற்றும் பார்த்தேன். சௌகரியமான இடம் காணப்படவில்லை. அப்போதும் ஒருவன் படுக்கையைத் தட்டிய ஓசை ஓயவில்லை. திடீரென்று அந்த மனிதன், "சே! என்ன தட்டினாலும் இந்த மூட்டைப்பூச்சி உபத்திரவம் தொலையமாட்டேனென்கிறதே! இப்படி தினம் உபத்திரவப் படுவதைவிட, இந்தப் படுக்கையை நெருப்பில் போட்டுக் கொளுத்திவிடலாம்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்ட குரலோசை உண்டாயிற்று. அந்தக் குரல் மிகவும் பழகிய குரலாயிருந்தது. அது யாருடைய குரலாயிருக்கும் என்று நினைத்தபடியே நான் மறைந்துகொள்ளத் தகுதியான இடம் ஏதாவதிருக்கிறதாவென்று பார்த்தேன்.

அந்தக் கட்டிடத்திற்குள் நுழைய அங்கே ஒரு வாசற்படி காணப்பட்டது. அந்த இடத்தில் இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. நான் கதவண்டை நெருங்கி, அதை அழுத்திப் பார்த்தேன். அது திறக்கவில்லை. அப்போது கட்டிடத்தின் முன்புறத்தில் திடீரென்று யாரோ ஓடிய காலடி ஓசை கேட்டது. கதவைத் திறந்த மனிதன், நான் ஜன்னலண்டை இல்லாததைக் கண்டு, நான் கட்டிடத்தின் பின்புறத்திற்கு வந்திருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டு, என்னைப் பிடிக்க ஓடி வருகிறானென்ற எண்ணம் உண்டாயிற்று. இன்னொரு பக்கத்தின் வழியாக கட்டிடத்தை சுற்றிக் கொண்டு ஓடி முன்பக்கத்தால் வெளியில் போய்விடலாமாவென்று நான் நினைத்தேன். ஆனால், அதற்கு அவசியமான அவகாசம் இராது என்பதும் விளங்கியது. ஆகவே, நான் துணிகரமான ஒரு வேலை செய்தே, அந்த மனிதனுடைய கண்ணில் படாமல் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்துகொண்டேன்.

நானிருந்த வாசற்படி ஒரு சிறிய தாழ்வாரத்தி லிருந்தது. அதனால் வாசற்படிக்கும், அந்த மனிதன் ஓடுமிடத்திற்கும் சுமார் எட்டடி தூரமாவது இருக்குமாதலால், அவன் அநேகமாய் கதவின் பக்கம் பார்க்காமல் ஓடிவிடுவான் என்ற ஒரு குருட்டு நம்பிக்கை

யுடன் நான் கதவின்மேல் சாய்ந்து நின்று, கதவு உட்புறம் தாளிடப் பட்டிருந்ததாவென்று கையால் தடவிப் பார்த்தேன்; அது வெளிப் புறத்தில் பூட்டப்பெற்றிருந்தது. அப்போது அங்கே ஓடிவந்த அந்த மனிதன் வேகமாய் நேராகவே பார்த்தபடி போய்விட்டான். நான் உடனே கொத்துசாவியை எடுத்து, ஒவ்வொன்றாய் முயன்று பார்த்தேன். அப்போது கட்டிடத்தின் முன்புறத்தில் பேச்சுக் குரல் கேட்டது. ஒரு குரல், "இது பெரிய ஆச்சரியமா யிருக்கிறதே! ஜன்னலுக்குப் பக்கத்தில் வந்தவன் எங்கே போயிருப்பான்!" என்றது. அப்போது நான் உபயோகப்படுத்திய இரண்டு சாவிகளும் பூட்டைத் திறக்கவில்லையாகையால் மூன்றாவது சாவியை உபயோகித்தேன். அதுவும் திறக்கவில்லையாகையால் முன்புறத்தில் நடந்த சம்பாஷணையைக் கேட்டபடியே வேறொரு சாவியை உபயோகப்படுத்தினேன். முன்புறத்தில் அப்போது இன்னொரு குரல், "யாரோ வந்தமாதிரி இருந்தது. விளக்கை அணைத்துவிட்டுப் பார்த்தால் ஆள் மாயமாய் மறைந்துவிட்டானே. அவன் ஒரு வேளை கட்டிடத்தின் பின்புறத்திலுள்ள தாழ்வாரத்தில் நிற்கிறானோ என்னவோ! நீதான் பெரிய குருடனாயிற்றே! உனக்குப் பகலிலேயே கண் சரியாகத் தெரியாமலிருக்க, இரவில் எப்படித் தெரியப் போகிறது! ஆள் பக்கத்திலேயே நின்றிருந்தால்கூட உனக்குத் தெரியாது" என்றது. இன்னொருவன், "நான் தாழ்வாரத்தை நன்றாகப் பார்த்தேன். அங்கே யாரும் இல்லை. வேண்டுமானால் இன்னொரு தடவை பார்த்துவிட்டு வருகிறேன். ஆள் நிச்சயமாய் வெளியில்தான் ஓடிவிட்டான். சந்தேகமே இல்லை" என்றான். அதேசமயத்தில் ஒரு திறவுகோல் பூட்டைத் திறந்தது. பூட்டை விலக்கிக் கையி லெடுத்துக்கொண்டு நான் கதவைத் திறந்தேன். அப்போது இரண்டாவது மனிதன், "நீதான் பார்த்து விட்டதாய்ச் சொல்லுகிறாயே! அப்படியிருக்க ஆள் அங்கே இருக்கவா போகிறான்! நீ சொன்னபடி அவன் வெளியில்தான் ஓடிப் போயிருக்கவேண்டும். நீ மதில் கதவைப் பூட்டிவிட்டு வா. அவன் மறுபடியும் வருகிறானா என்று ஜன்னலின் வழிவாகப் பார்த்துக் கொண்டிருக்கலாம்" என்றான். கதவு மறுபடியும் பூட்டப்பட்ட ஓசை உண்டாயிற்று. அதே சமயத்தில் நான் கதவிலிருந்த நாதாங்கியில் பூட்டைப் பூட்டிவிட்டு உள்ளே நுழைந்து கதவை மறுபடியும் மூடிவிட்டேன்.

நானிருந்த இடத்தில் இருள் சூழ்ந்துகொண் டிருந்தது. மின்சார விளக்கைக் கொளுத்தியோ, நெருப்புக்குச்சி யொன்றைக் கிழித்தோ பார்த்தால், நான் இருந்தது அவர்களுக்குத் தெரிந்து விடுமாதலால், அப்படிச் செய்யக்கூடாதென்று நினைத்து நான் இருளிலேயே குருடன்போல் எதிரில் கையை நீட்டியபடி நிதானமாக நடந்தேன். மறுபடியும், ஒரு கதவு தாளிடப்பெற்ற ஓசை எனக்கு மிகவும் சமீபத்தில் கேட்டது. அப்போது, எதிரில் இருந்த ஒரு கதவு என் திருஷ்டியில் பட்டது. நான் உடனே கையை வைத்து அழுத்தவே, கதவு திறந்துகொள்ள வாரம்பித்தது. அதற்கு அப்பால் ஓர் அறையும், அதற்கப்பாலிருந்த வாசற்படிக்கு வெளியில் எரிந்த விளக்கின் வெளிச்சமும் தெரியவே, நான் தைரியமாய் அந்த அறைக்குள் நுழைந்து, நான் திறந்துகொண்டு வந்த கதவை மூடிவிட்டேன்.

பிறகு நான் வாசற்படியி னருகில் போய், தலையை மெதுவாக நீட்டி அப்புறம் பார்க்க, அங்கே ஒரு மேஜையின்மேல் ஒரு மின்சார விளக்கு எரிந்துகொண் டிருந்தது. அதற்கப்பால் காணப்பட்ட ஜன்னலொன்றி னருகில் இரண்டு நாற்காலிகளில் இருவர் உட்கார்ந்து ஜன்னலின் வழியாக வெளிப்புறத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இருவரது முதுகுப் பக்கமே எனக்குத் தெரிந்தது. அவர்களிருவரில் ஒருவருடைய வலதுகை கீழே தொங்கிக்கொண் டிருந்தது.

அந்தக் கையில் ஒரு ரிவால்வர் காணப்பட்டது மதில் கதவைத் திறந்துகொண்டு யாராவது உள்ளே வந்தால், உடனே சுடுவதற்கு அவன் தயாராயிருந்தானென்பதைக் காட்டியது. மேஜையின்மேல் பல புஸ்தகங்களும், ஏராளமான காகிதங்களும், உறைகளும், இதர சாமான்களும் இறைந்து கிடந்தன. எழுதும்போது அடியில் வைத்துக்கொள்ளுவதற்கு உபயோகிக்கப்படும் அட்டையின்மேல் ஒரு காகிதம் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் ஒரு பேனாவும் காணப்பட்டது. அவர்களி லொருவன் யாருக்கோ கடிதம் எழுதிக்கொண் டிருந்திருக்க வேண்டுமென்றும், ஆனால் ஜன்னலுக்கு வெளியில் நான் வந்ததைக் கண்டு கடிதம் எழுதுவதை நிறுத்தியிருக்க வேண்டுமென்றும் நான் அநுமானித்தேன். அந்தக் காகிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அடக்க முடியாத ஓர் அவா

என் மனதில் உண்டாயிற்று. எனவே, நான் ஓசை செய்யாமல் கீழே குனிந்து தவழ்ந்தபடி மேஜையினருகில் போனேன். அவர்களிருவரும் திரும்பிப் பார்க்கவில்லை. மேஜையினருகில் இருந்தபடி மெதுவாக மேலே கையை நீட்டி அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு நான் எந்த அறையிலிருந்து வந்தேனோ அந்த அறைக்கு திரும்பவும் போக எத்தனித்தேன். அப்போது அவர்களில் ஒருவன், "நாம் ஏன் அநாவசியமாய் உட்கார்ந்திருக்கவேண்டும். அவன் மறுபடியும் இன்றைய தினம் திரும்பி வரமாட்டான். நாம் விழிப்பாக இருப்போ மென்பது அவனுக்குத் தெரியாதா" என்றான்.

உடனே மற்றவன், "சரி; அப்படியானால் நாம் இங்கே உட்கார்ந்திருக்க வேண்டாம். நான் அந்தக் கடிதத்தை மேலே எழுதுகிறேன். நாமிருவரும் மேஜையி னருகி லிருந்தபடியே அடிக்கடி ஜன்னலின் வழியாகப் பார்த்துக்கொள்ளலாம்" என்றான். இரண்டாவதாகப் பேசியவன் சமரபுரி முதலியா ரென்பது நன்றாகத் தெரிந்தது. இன்னொருவன் சமரபுரி முதலியாருடன் எப்போதும் திரியும் மனிதன் என்பதும் தெரிந்தது.

அவர்களிருவரும் நாற்காலியை விட்டு எழுந்திருந்து மேஜையினருகில் வந்தால் என்னைப் பார்த்துவிடுவதோடு, அவர்கள் எழுதிக்கொண்டிருந்த கடிதத்தை நான் எடுத்துக்கொண்டதையும் தெரிந்துகொள்ளுவார்களாதலால், அதற்கு இடங்கொடுக்கக் கூடாதென்றும், அது உபயோகமற்ற கடிதமா யிருக்குமானால் அதை முன்போல் வைத்துவிட்டு அவர்கள் செய்யும் காரியங்களையும், பேசும் விஷயங்களையும் கவனிக்க வேண்டுமென்றும் எண்ணிக் கொண்டேன்.

அப்போது திடீரென்று மதில் கதவிற்கு வெளியில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்ற ஓசை உண்டாயிற்று. உடனே சமரபுரி முதலி, "வண்டியில் யார் வந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லையே! இந்த அகாலத்தில் இங்கே வரக்கூடியவர்கள் யாருமில்லையே!" என்று கூறியபடி கவனமாய்ப் பார்த்தான். மற்றவனும் கவனித்தான். அதுவே நான் நழுவுவதற்குத் தகுந்த சமயமாய்த் தோன்றியதாகையால் தவழ்ந்தபடி, முன் இருந்த அறைக்கு வேகமாய்ப் போய் விளக்கின் வெளிச்சத்தில் கடிதத்தை மாத்திரம்

கா—29

199443

பார்த்தேன். என்னுடைய உடம்பெல்லாம் மறைவிலிருந்தது. நான் கடிதத்தைப் பார்த்தவுடன் திடுக்கிட்டுப் போய்விட்டேன்.

டாக்டர்:—(ஆவலுடன்) அதில் என்ன எழுதப்பட்டிருந்தது?

மற்றவர்:—அதில் எழுதப்பட்டிருந்த விஷயத்தைப்பற்றி நான் வியப்படையவில்லை. கையெழுத்தில் ஒரு வேடிக்கை இருந்தது.

டாக்டர்:— என்ன வேடிக்கை? கந்தசாமி வாண்டையானுடைய வீட்டில் உங்களுக்குக் கிடைத்த கடிதங்களிலிருந்த கையெழுத்தைப்போல் இருந்ததா?

மற்றவர்:—(புன்சிரிப்புடன்) அதுதான் தப்பான யூகம். அந்தக் கையெழுத்துக்கு முற்றிலும் மாறாக இருந்தது.

டாக்டர்:—(திடுக்கிட்டு வியப்புடன் அவருடைய முகத்தைப் பார்த்து) எப்படியிருந்தது என்று சொல்லுகிறீர்கள்?

மற்றவர்:—அந்தக் கையெழுத்தைப்போல் இல்லாமல் வேறு விதமாகவிருந்தது. அதைக் கண்டவுடன் நான் திடுக்கிட்டுப் போய்விட்டேன். கையெழுத்து என்ன காரணத்தினால் அப்படி வித்தியாசப்படுகிறது என்று நான் யோசித்துப் பார்த்தேன். அப்படியானால், சமரபுரி முதலியாரென்ற பெயருள்ள இரண்டு ஆசாமிகளோ, அல்லது, சமரபுரி முதலியாரைப்போல நடிக்கும் இன்னொருவரோ கந்தசாமி வாண்டையானுக்கு எழுதியிருக்க வேண்டுமென்று எண்ணினேன். அதோடு எனக்கு இன்னொரு சந்தேகமும் தோன்றியது. என் எதிரில் நாற்காலியில் காணப்பட்டவர் உண்மையில் இரண்டு சமரபுரி முதலியார்களில் எவராயிருப்பார் என்னும் சந்தேகம் தோன்றியது. அதன் பிறகு நான் கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். அதில் காலவயிறவன் பிள்ளையை இனி யாரும் தேடமாட்டார்களென்றும், அதனால் அவனுடன் தன்னிடம் வரும்படியும் யாருக்கோ அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது. அப்போது தெருப்பக்கத்தில் மோட்டார் வண்டியின் அழைப்போசை கேட்டது. மோட்டாரில் வந்திருந்தவர் சமரபுரி முதலியாரைக் கூப்பிடுகிறார் என்பது நன்றாக விளங்கியது. உடனே முதலியார் மற்றவனிடம், "நீ போய் மதில் கதவைத் திறக்காமலே, வந்திருப்பவர் யாரென்பதை விசாரி. உள்ளே வரக்கூடிய மனிதரா யிருந்தால் மாத்திரம் உள்ளே விடு. வேறு மனிதரா யிருந்தால், காலையில் வரச்சொல்" என்றான்.

உடனே மற்றவன் அருகிலிருந்த கதவைத் திறந்துகொண்டு முன்பக்கம் போய்விட்டான். மதில் கதவின் அருகில் சென்று, "யாரையா அது?" என்று வினவினான். வெளியிலிருந்தவர், "கதவைத் திற" என்று கூறியதும் எனக்கு நன்றாய்க் கேட்டது. சமரபுரி முதலியாரின் ஆள், "வண்டியில் வந்திருப்பவர் யாரென்பது தெரியவில்லை. இதுவோ அகாலமான வேளை. நீங்கள் யாரென்பதைத் தெரிவிக்காமலே கதவைத் திறக்கச் சொன்னால், எப்படித் திறப்பேன்?" என்றான்.

மற்றவன், "வண்டியில் இருக்கிறவர் தம்முடைய பெயரைச் சொல்லமாட்டேனென்கிறார். அவர் உங்களுடைய மனிதர்தானாம். கதவைத் திறந்தால் தாம் யாரென்பது உடனே உங்களுக்குத் தெரியுமாம்" என்றான்.

முதல் மனிதன் அதற்கு உடனே பதில் தெரிவிக்கவில்லை. தான் அந்த சந்தர்ப்பத்தில் எப்படி நடந்துகொள்ளுவதென்பதை அறியாமல் தயங்குகிறானென்பது நன்றாக விளங்கியது. அப்போது சமரபுரி முதலியார், "சரி; கதவைத் திறந்துவிடு" என்று ஜன்னல் வழியாக முன்புறம் பார்த்தபடி கூறியதை நான் கவனித்தேன். உடனே மதில் கதவு திறக்கப்பட்டது. மோட்டார் புறப்பட்டுப் போன ஓசை கேட்டது. மறுபடியும் மதில் கதவு மூடிப் பூட்டப்பட்ட ஓசை உண்டாயிற்று. உடனே சமரபுரி முதலியாரின் மனிதன், "யார் நீங்கள் என்பது தெரியவில்லையே!" என்று நயமாக வினவினான். அதற்கு மற்றவர், "நான் சமரபுரி முதலியாருடைய சிநேகிதன். அவரைப் பார்க்க வேண்டுமென்று வந்தேன். நீ யார்?" என்றார். அந்தக் குரலும் எனக்குப் பழக்கமானதாய்த் தோன்றியது. அதே குரலை எப்போதோ சமீபத்தில் கேட்டதாய் எனக்கு உடனே நினைவுண்டாயிற்று. அது யாருடைய குரலென்று யோசித்துப் பார்க்க, உடனே அந்த விஷயம் நினைவிற்கு வந்தது. அதாவது, முதல்நாளிரவு ஒரு காலி வீட்டின் மாடியில் தனியாயிருந்த மனிதருடைய குரல்போல் இந்தக் குரல் இருந்தது.

அடுத்த நிமிஷம் அவர்களிருவரும் கட்டிடத்திற்கு வந்தனர். விளக்கு வெளிச்சத்தில் நான் அந்த மனிதரை நன்றாகப் பார்த்தேன். சமரபுரி முதலியாருடனும், கந்தசாமி வாண்டையானுடனும் நான் போராடியதற்குமுன் பின்புறத்தால் மறைந்துபோன

மனிதரே அவர் என்பது தெரிந்தது. அவருடைய முகத்தில் பல இடங்களில் கொப்புளங்கள் அப்போதும் காணப்பட்டன. அவரைப் பார்த்ததும் சமரபுரி முதலியார், "அடாடா! நீங்களா! யாரோவென்றல்லவா நினைத்துவிட்டேன். இப்படி நாற்காலியில் உட்காருங்கள்" என்றான்.

உடனே அந்த மனிதர் ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு மௌனமாக இருந்தார்.

அதனால் அவர் ஏதோ பேச விரும்புகிறாரென்றும், ஆனால் அதை எப்படி ஆரம்பிப்பது என்பதை யறியாமல் தயங்குகிறாரென்பதும் நன்றாகத் தெரிந்தன. அதைக் கண்ட சமரபுரி முதலி, "உங்களுடைய விஷயம் முழுதும் எனக்குத் தெரியும். நீங்களிருவரும் புறப்பட்டு வந்த விஷயத்தை ராமநாதன் விவரமாகச் சொன்னான்" என்றான்.

மற்றவர் :—(வியப்பைத் தோற்றுவித்த குரலில்) என்ன! ராமநாதன் உங்களிடம் வந்தானா? எப்போது வந்தான்?

சமரபுரி :—அவன் அன்றையதினம் உங்களை விட்டுப் பிரிந்தானே, அன்றைய இரவே என்னிடம் வந்துவிட்டான்!

மற்றவர் :—அவன் இப்போது எங்கே இருக்கிறான்?

சமரபுரி :—அவனை பந்தோபஸ்தான ஓர் இடத்தில் வைத்திருக்கிறேன். நீங்கள் இதுவரையில் எங்கே இருந்தீர்கள்?

மற்றவர் :—நான் பல இடங்களில் மறைந்துகொண்டிருந்தேன். நான் போன இடத்திலெல்லாம் உபத்திரவமே நேர்ந்துகொண்டிருக்கிறது. நானிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க எவனோ முயற்சி செய்கிறானென்பது தெரிகிறது.

சமரபுரி :—அதுமாத்திரமா! ராமநாதனிருக்குமிடத்தையும் அறிய யாரோ முயற்சி செய்கிறான். அவன் சி. ஐ. டி. போலீஸ்காரனாயிருப்பானோவென்ற சந்தேகம் என் மனதில் உண்டாகிறது.

மற்றவர் :—(திடுக்கிட்டு) அப்படியா! அக்கிரமங்கள் செய்கிறவர்களுக்குத்தான் இது காலமாயிருக்கிறது. யோக்கியர்களாயிருப்பவர்களை கொஞ்சநேரம் கூட தலைசாய்த்துப் படுக்க விடாமல் தொந்தரவு செய்வதற்கு இந்த சி. ஐ. டி. இலாகா ஏற்பட்டிருக்கிறதுபோல் தோன்றுகிறது. ஆனால் அயோக்கியர்கள், தங்கள்மேல்

எவரும் எந்த விதமான சந்தேகமும் கொள்ளாதபடி சுயேச்சையாகத் திரிந்துகொண்டிருக்கிறார்கள்.

சமரபுரி :—ஆம். ஆம். திகம்பரசாமியா ரென்ற பெயருடையவன் ஒருவன் இருக்கிறான். அவன் எதற்காகவோ ராமநாதனிருக்கும் இடங்களுக்கெல்லாம் எப்படியோ தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறான். கொஞ்ச நேரத்திற்குமுன் அவன் இந்த ஊரிலிருக்கும் யோகீசுவரருடைய வீட்டில் அகப்பட்டுக்கொண்டு நெருப்பில் எரிந்துபோய் விட்டதாய் நம்பக்கூடிய ஓர் இடத்திலிருந்து சற்று முன்புதான் எனக்குத் தகவல் வந்தது. இனி ராமநாதனைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லையென்றும், அவனை வெளியில் விட்டுவிடலாமென்றும், அவனை மறைத்துவைத்திருக்கும் ஆசாமிக்கு ஒரு கடிதம் எழுத இப்போதுதான் ஆரம்பித்தேன். சற்றுமுன்பு எவனோ திருடுவதற்காக இங்கே வந்துவிட்டுப் போனான். அவன் எங்களிடம் அகப்படவில்லை. அதோடு அவன் யாரென்பதும் எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. அவன் வந்ததால், நான் கடிதம் எழுதியது தடைப்பட்டுவிட்டது. உங்களுக்கு சாப்பாடு ஆய்விட்டதல்லவா?

மற்றவர் :—ஆய்விட்டது; ஆகாவிட்டாலும், இந்த அகாலத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

சமரபுரி :—(புன்சிரிப்புடன்) என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! அதோ எதிரில் தெரிகிறதே அந்த அறையில் ஓர் அலமாரியில் பழங்களும் பாலும் இருக்கின்றன. அடிக்கடி என்னுடைய நண்பர்கள் யாராவது இங்கே வருவது வழக்கம். நானாவது, அவர்களாவது அவைகளை சாப்பிடுவோம். இன்றைய தினம் தற்செயலாய் யாரும் வரவில்லை. எனக்கு எதுவும் சாப்பிடப் பிடிக்கவில்லையாகையால் எல்லாம் அப்படியே இருக்கின்றன.

மற்றவர் :—அதுவும் ஓர் அதிர்ஷ்டம்தான்—என்றார். சமரபுரி முதலி எந்த அறையில் பழங்களும், பாலும் இருந்ததாய்க் காட்டினானோ அதிலேதான் நான் ஒளிந்துகொண்டிருந்தேன்; ஆகையால், அதைக் கேட்டவுடன் நான் கலவரம் அடைந்தேன். திடீரென்று சமரபுரி முதலி நானிருந்த இடத்திற்கு வந்துவிட்டால் என்ன செய்வதென்று யோசித்தேன். நான் நினைத்தது சரியாகவே முடிந்தது; சமரபுரி முதலி மற்றவரிடம், "நீங்கள் கேட்ட கேள்வி

விருந்தே நீங்கள் சாப்பிடவில்லையென்பதும், நீங்கள் இந்த அகாலத்தில் எங்களை அசௌகரியப்படுத்த விரும்பவில்லை என்பதும் நன்றாகத் தெரிகின்றன. பரவாயில்லை. இருக்கும் பொருள்களை உபயோகியுங்கள். அவைகளை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறியபடி, தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். உடனே நான் எனக்கருகிலிருந்த கதவைத் திறந்துகொண்டு, பின்புறத்திலிருந்த இன்னோர் அறைக்குப் போய்க் கதவை மூடிக்கொண்டேன்.

அப்போது மற்றவர், "நான் சாப்பிட்டுவிட்டேன். எதற்காக உங்களிடம் நான் பொய் சொல்லப்போகிறேன். அநாவசியமாய், ஆகார விஷயத்தில் புகுகினால், என்னுடைய வயிறல்லவா காயும்" என்றார். சமரபுரி முதலி, "பரவாயில்லை. எடுத்துக்கொண்டு வருகிறேன். ஏதோ சாப்பிட்டவரையில் சாப்பிடுங்களேன். ஏற்கனவே நீங்கள் சாப்பிட்டிருந்தாலும், இப்போது எனக்காகவாவது மறுபடியும் சொற்பம் சாப்பிடுவதால் உங்களுக்கு அதிக உபத்திரவம் உண்டாகிவிடாது. பழங்கள் உடம்பிற்கு எவ்விதமான கெடுதலையும் செய்யாது" என்று கூறிவிட்டு, நான் முன்பு நின்று கொண்டிருந்த அறைக்கு வந்த காலடியோசை கேட்டது. பிறகு அலமாரிக்கதவுகள் திறக்கப்பட்ட ஓசை கேட்டது. அதன்பிறகு ஏதோ பொருள்களை எடுத்துக்கொண்டு சமரபுரி முதலி அப்பால் போனதையும் உணர்ந்தேன்.

அதன்பிறகு சமரபுரி முதலியும், இன்னொருவனும், புதிதாக வந்தவருக்கு உபசாரம் செய்தனர்; அதை அவர் அரைமனதுடன் ஏற்றுக்கொண்டதாக அவருடைய சொற்கள் காட்டின. பிறகு சமரபுரி முதலி மறுபடி அந்த அறையில் நுழைந்து, அலமாரியைத் திறந்து, சாப்பிடாமல் மிகுந்திருந்தவைகளைக் கொண்டுவந்து வைத்ததைக் கதவிடுக்கால் நான் பார்த்தேன். உடனே சமரபுரி முதலி முன்னிருந்த இடத்திற்குப் போய்விடவே, மறுபடியும் அவருக்கும் புதிதாக வந்தவருக்கும் சம்பாஷணை நடந்தது.

வந்தவர்:— இப்போது அவன் என்ன செய்துகொண்டிருக்கிறான்?

சமரபுரி:—யாரைப்பற்றிக் கேட்கிறீர்கள்?

வந்தவர்:—எங்களை இந்த கதிக்கு ஆளாக்கினவனைப் பற்றியேதான் கேட்கிறேன்.

சமரபுரி:—அவன் இருக்குமிடம் தெரியவில்லை. நான்கூட இரண்டு நாட்களுக்குமுன்பு வரையில் விஷயங்களை அறியவில்லை. ராமனாதன் சொன்ன பிறகுதான் நானும் விஷயத்தைத் தெரிந்துகொண்டேன். அவன் எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு மறைந்திருக்கவேண்டும்.

வந்தவர்:—அப்படித்தானிருக்கும். அவன் என் வீட்டிலிருக்கிறானென்று எண்ணி அங்கே போய்ப் பார்த்தேன். அந்த வீட்டை யாரோ இப்போது அங்கிருப்பவருக்கு என் பெயரால் விற்றுவிட்டதாய் தகவல் தெரிந்தது. ராமனாதன் சங்கதியும் விநோதமானது. அவனுடைய வீட்டிலாவது அவன் இருக்கிறானென்று நான் விசாரிக்க, ராமனாதனின் பெயராலேயே அந்த வீட்டையும் யாரோ விற்றுவிட்டதாய் அறிந்தேன். இப்படி ஆள் மாறாட்டம் செய்து சொத்துகளை அபகரித்தவன் யாரென்பதும், அவன் இப்போது எங்கிருக்கிறானென்பதும் தெரியவில்லை. இது ஆச்சரியமான சங்கதியாயிருக்கிறது.

சமரபுரி:—இப்போது மேலே என்ன செய்யலாமென்று முடிவு செய்திருக்கிறீர்கள்?

வந்தவர்:—மேலே என்ன செய்வதென்பதுதான் எனக்கு விளங்கவில்லை. போலீஸாரிடம் போனாலோ அவர்கள் எங்களிருவருடைய சொற்களையும் நம்பாமல் எங்களை நாங்களிருந்த இடத்திற்கே திருப்பி அனுப்பிவிடுவார்கள். அதனால் மறைந்துகொண்டு காலத்தைக் கழிக்கலாமென்றாலோ அதுவும் சங்கடமாயிருக்கிறது. ஆகையால் என்ன செய்வதென்பது எனக்கு விளங்கவில்லை.

சமரபுரி:—(சிறிதுநேரம் மௌனமாய் இருந்த பிறகு) ராமனாதனிருக்குமிடத்திற்கு உங்களையு மனுப்புகிறேன். அங்கேயே இன்னும் சில நாட்கள் இருங்கள். மேலே என்ன செய்வதென்பதை யோசிப்போம்.

மற்றவர்:—அப்படித்தான் இப்போது செய்யவேண்டும்.

சமரபுரி:—அது சரிதான். நீங்களிருவரும் எப்படிப் பிரிந்து போய்விட்டீர்கள்?

மற்றவர்:—நாங்கள் காமாட்சி நாய்க்கருடைய வீட்டிலிருந்தோம். அவன் மாலையில் தன்னுடைய வீட்டிற்குப் போய், அது என்ன நிலைமையி லிருக்கிறதென்பதைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு வெளியில் போனான். வெகுநேரமாகியும் அவன் திரும்பி வரவில்லை. அதோடு மழையும் பெய்தது. அதனால் அவன் தன்னுடைய வீட்டிலேயே தங்கியிருப்பான் என்று நான் நினைத்துக் கொண்டேன். அதன் பிறகு அந்த வீட்டில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. அதைப் பார்த்துவிட்டு அதை அணைக்க ஜனங்கள் வருவார்களாதலால் அங்கே நான் இருக்கக்கூடாதென்று நினைத்து மறைந்தேன். மாலையிலேயே நான் காமாட்சி நாய்க்கரிடம் பணம் கொஞ்சம் வாங்கி வைத்திருந்தேனாதலால்—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள், "சாமீ! சாமீ! கதவைத் திறவுங்கள்" என்று முன்பக்கத்திலிருந்து யாரோ உரக்கக் கூவிய குரலோசை கேட்டது. உடனே அவர்களுடைய சம்பாஷணை நின்றது. சமரபுரி முதலி, "இராக் காவல்காரன் படுத்துக்கொள்ளுவதற்காக வந்திருக்கிறான். அவனைப் பின்பக்கத்திலிருக்கும் தாழ்வாரத்திலாவது, அவனுடைய அறையிலாவது படுத்துக்கொள்ளச் சொல். இன்றையதினம் அவன் (எதிரிலிருந்த அறையைக் காட்டி) இதில் படுத்துக்கொள்ள வேண்டாம்" என்று தன்னோடிருந்த மனிதரிடம் சொல்லவே, அது என்னைத் தூக்கி வாரிப்போட்டது. அதாவது, நான் ஒளிந்திருந்த அறையில் அவன் படுத்துக்கொள்ளும்படி சமரபுரி சொன்னாரென்பது நன்றாக விளங்கியது. ஆகையால் நான் அதற்குமேல் அங்கே மறைந்திருப்பது முடியாத காரியமாதலால், மேலே என்ன செய்வதென்பதைப்பற்றி நான் கவலையுடன் யோசிக்கலானேன்.

அப்போது அருகிலிருந்த கதவைத் திறந்துகொண்டு, யாரோ மதில்கதவைத் திறக்கப் போனது தெரிந்தது. உள்ளே நடந்த சம்பாஷணை முழுதையையும் கேட்காமல், வெளியில் போக எனக்கு மனமில்லை. ஆனால் அங்கே இருப்பது அபாயகரமானதாகையால் நான் சரேலென்று முன்புற அறையை யடைந்தேன். அப்போது சமரபுரி முதலி, "நாம் இனி நாளையகாலையில் பேசிக்கொள்ளலாம்; ஆள் சமீபத்திலேயே படுத்துக்கொள்ளப் போகிறான். அவன் காதில் விழும்படியாக நாம் பேசுவது சரியல்ல" என்றான். அப்போது முன்புறத்திலுள்ள மதில்கதவு திறக்கப்பட்டு, மறுபடியும், மூடப்பட்ட ஓசைகள் கேட்டன. சமரபுரி முதலி

உடனே அங்கே ஒரு மூலையிலிருந்த இரண்டு படுக்கைகளை எடுத்து ஒவ்வொன்றாகக் கீழே விரித்தான். இரண்டு படுக்கைகளையும் விரித்துவிட்டு, "நீங்கள் ஒன்றில் படுத்துக்கொள்ளுங்கள். நான் இன்னொன்றில் படுத்துக்கொள்ளுகிறேன். அவன் இன்றையதினம் மாத்திரம் மேஜையின்மேல் படுத்துக்கொள்ளட்டும்" என்று சொன்னான். அதே சமயத்தில் முன்புறத்தில் மதில்கதவை திறந்தவன் வெளியிலிருந்து வந்தவனிடம் சமரபுரி முதலி கூறிய விஷயத்தைத் தெரிவித்து அவனை யனுப்பிவிட்டு உள்ளே வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டான். காவல்காரன் கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டு இன்னும் இரண்டொரு நிமிஷங்களில் பின்புறத்திற்கு வந்து, பூட்டு திறக்கப்பட்டிருப்பதைக் கண்டு கூச்சலிடுவானாகில், சமரபுரி முதலி முதலியோர் என்னை நிச்சயமாய்ப் பார்த்துவிடுவார்கள். அதனால் நான் சரேலென்று பின்பக்கத்திலிருந்த அறைக்கு மறுபடியும் போய் வெளிப்புறத்தில் பூட்டைப் பூட்டிவிட்டு அப்பால் போனேன். அவன் கட்டிடத்தைச் சுற்றி பிரதக்ஷிணமாக வருவான் என்று எண்ணியபடி இன்னொரு பக்கத்தால் நான் போனேன். பின்பாகத்தைக் கடந்து, முடக்கில் திரும்பியபோது, எதிரில் அவன் வந்துகொண்டிருந்ததை நான் பார்த்து திகைத்துவிட்டேன். ஆனாலும், தைரியத்தை விடாமல் அவனை நோக்கி, "கக்கூஸ் பின்பக்கம் இருப்பதாய் நினைத்துக்கொண்டு பின்னால் போய்ப் பார்த்தேன். அங்கே காணோம். எங்கே யிருக்கிறது?" என்று நிதானமாகவும் தணிவான குரலிலும் கேட்டேன்.

உடனே மற்றவன், "கக்கூஸ் பின்பக்கத்தில் எங்கே இருக்கிறது? மைதானத்தின் கடைசியிலல்லவா இருக்கிறது! வாருங்கள். நான் அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று கூறிவிட்டு என்னை அழைத்துக்கொண்டு போனான். அவன் முன்னால் போக, அவனை நான் பின்தொடர்ந்தேன். அவன், "நீங்கள் முதலியாரிடம் வந்தீர்கள் போலிருக்கிறது. அவர் உங்களுக்கு ஏதாவது சொந்தமோ?" என்று வினவினான். அதற்கு நான், "இல்லை. அவர் என்னுடைய சிநேகிதர். நீதான் காவல்காரன்போ லிருக்கிறது. நீ இரவில் தூங்க மாட்டாயோ? மைதானத்தில் சுற்றிக்கொண்டிருக்க வேண்டுமோ?" என்றேன். அதற்கவன், "இரவில் இரண்டே தடவைகள் மாத்திரம் சுற்றிப் பார்ப்பேன். நானும் மனிதன்தானே! எனக்கு மாத்திரம் இரவில் தூக்கம் வாராதா? ஏதோ கொஞ்சநேரமாவது தூங்

காமலிருக்க முடியுமா?" என்றான். மைதானத்தின் இன்னொரு கோடியை யடைய சுமார் ஐந்து நிமிஷங்களாயின. எதிரில் கக்கூஸொன்று காணப்பட்டது. அதனருகில் சிறிது தூரத்தில் ஒரு மதில் கதவு காணப்பட்டது. அதற்கு வெளியில் ஒரு தெருவு இருந்தது. நான் கதவினருகில் சென்று வெளிப்புறத்தைப் பார்த்தேன். கதவிற்கு சரியாய் நேரெதிரில் ஒரு ரஸ்தா, மைதானத்தின் ஓரமாக வெளியில் காணப்பட்ட ரஸ்தாவிலிருந்து பிரிந்து போனது தெரிந்தது. அந்த ரஸ்தாவில் சுமார் கால் மைலுக்கப்பால் வலது பக்கத்தின் ஓரத்தில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது தெரிந்தது.

நான் உடனே அவனிடம், "ஏனப்பா! அதோ விளக்கு தெரிகிறதே! அதென்ன கடையா?" என்றேன். காவல்காரன், "ஆமாம். அது கடைதான். அந்தக் கடை இரவு பன்னிரெண்டு மணி வரையில் திறந்திருக்கும்" என்றான். நான் உடனே, "நீ ஒரு காரியம் செய்கிறாயா? அந்தக் கடைக்கு ஓடி ஒரு சோடா வாங்கிக்கொண்டு வருகிறாயா? இந்தக் காசை வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு அவனுடைய கையில் ஓரணாவை வைத்துவிட்டு, "எனக்கு அரையணாவிற்கு ஒரு சோடா வாங்கிக்கொண்டு, மிச்சமுள்ள அரையணாவிற்கு நீ ஏதாவது வாங்கிக்கொள்" என்றேன். அதைக் கேட்ட காவல்காரன் சற்று தயங்கினான்.

டாக்டர் ராமாராவ்:— அது சரிதான். அவனை எதற்காக அனுப்பவேண்டும்? கதவைத் திறக்கச்செய்து நீங்களே கடைக்குப் போய்விட்டு வருவதாகச் சொல்லிவிட்டு அப்படியே கம்பி நீட்டியிருக்கலாமே!

மற்றவர்:—நான் அப்படிச் செய்யாததற்கு ஒரு காரணமிருந்தது. நான் அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள விரும்பினேனே ஒழிய, அந்தக் கட்டிடத்தை விட்டுப்போக விரும்பவில்லை.

டாக்டர்:—அதன் பிறகு என்ன நடந்தது? அவன் புறப்பட்டுப் போனானா?

மற்றவர்:—அதுதான் இல்லை. அவன் உடனே, "அடாடா! இந்த வழியாகப் போவதற்கில்லையே. கதவு பூட்டப்பட்டிருக்கிறதே. சாவியோ முதலியாரிட மிருக்கிறது. நான் போய் அவரிடம் கேட்டு சாவி வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றான்.

டாக்டர்:—அதற்கு நீங்கள் என்ன மறுமொழி சொன்னீர்கள்?

மற்றவர்:—நான் உடனே, "சாவி உன்னிடத்தி லிருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன். சாவி அவரிடமா யிருக்கிறது? இருக்கட்டும். நாம் திரும்பிப்போய் வாங்கிக்கொள்ளலாம்" என்றேன். அவன் உடனே, "அப்படியே செய்வோம்" என்றான். நான், "முதலில் எனக்கு வயிற்றில் ஏதோ உபத்திரவம் உண்டாயிற்று. ஆனால் கக்கூஸ் இருந்த இடத்திற்கு நடந்து வந்ததால் அநேகமாய் உடம்பு சரியாய்விட்டது. ஆகையால் நாம் திரும்பிப் போகலாம்; அநாவசியமாக என்னை இங்கே நீ அழைத்து வரும்படி ஆய்விட்டது" என்றேன். அவன், "அதைப்பற்றி பரவாயில்லை; வாருங்கள் போவோம்" என்று சொல்லியபடி நடக்கலானான். இருவரும் திரும்பி மௌனமாகவே கட்டிடத்தினருகில் வந்தோம். கட்டிடத்தின் முன்புறத்தில் அதுவரையில் எரிந்துகொண்டிருந்த விளக்கு அணைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அதனால் சமரபுரி முதலியும், மற்றவரும் படுத்துக்கொண்டனர் என்பதும் தெரிந்தது. நான் உடனே காவல்காரனிடம், "நீ உன் அறையில் படுத்துக்கொள். நானும் உன்னோடு உள்ளே வருகிறேன். அந்த வழியாகவே முன்புறம் போய்விடுகிறேன். அநாவசியமாக எதற்காகக் கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டு போகவேண்டும்?" என்றேன். காவல்காரன், "ஆமாம். அப்படியே செய்யுங்கள். முன்புறத்தில் அவர்கள் படுத்துக்கொண்டார்கள்போ லிருக்கிறது" என்றான்.

டாக்டர்:—அவனிடம் அப்படிச் சொன்னீர்களே! அதன் கருத்தென்ன? காவல்காரனுடன் உள்ளே போனால் அவனோடு இருப்பதோ முடியாத காரியம். முன்னால் போனால் முன்னாலிருந்தவர்களிடம் அகப்பட்டுக்கொள்ள வேண்டுமே!

மற்றவர்:—நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான். ஆனால் அவர்களிருந்த இரண்டு அறைகளிலும் நான் இருக்க உத்தேசிக்கவில்லை. அந்த இரண்டறைகளுக்கும் நடுவில் பழம் முதலியவைகள் வைக்கப்பட்டிருந்த அறை ஒன்று இருப்பதாய்ச் சொன்னேனல்லவா? முன்புறம் போவதாய்ச் சொல்லிவிட்டு அந்த அறையில் மறைந்திருக்கலாமென்று நினைத்தேன்.

டாக்டர்:—அவ்வளவு தைரியமாய் உள்ளே போகும் யோசனை வேறுயாருக்கும் அந்த சமயத்தில் தோன்றாது. அப்படி உள்ளே போய் என்ன செய்யலாமென்று நினைத்தீர்கள்?

மற்றவர்:—உள்ளே எனக்கு உதவக்கூடிய கடிதங்கள் முதலியவை அகப்படுகின்றனவா என்று பார்க்க விரும்பினேன்.

டாக்டர்:—அப்படிச் செய்திருப்பீர்கள். காவல்காரனுடைய அறையில் புகுந்து முன்புறம் போகவாரம்பித்த போதாவது, அதன் பிறகாவது அவன் உங்களுடன் பேச, அதனால் நீங்கள் அங்கே இருந்ததை மற்றவர்களறிந்துகொண்டுவிட்டார்களா? இல்லாவிட்டால் அப்படி எதுவும் நடக்கவில்லையா?

மற்றவர்:—உங்களுடைய யூகம் அவ்வளவும் தப்பானது; அப்படி எதுவும் நடக்கவில்லை. அப்போது முன்பக்கத்து அறையில், "என்ன கறுப்பா! உன்னோடு இருப்பது யார்? யாரோடு பேசிக்கொண்டிருக்கிறாய்?" என்று சமரபுரி முதலி கேட்டான். உடனே காவல்காரன், "வேறு யார் இங்கே வந்துவிடப் போகிறார்கள்! மதில் கதவுதான் பூட்டப்பட்டிருக்கிறதே; இவரோடுதான் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

டாக்டர்:—(ஆவலோடு) அடாடா! அப்படியா முடிந்தது!

மற்றவர்:—அப்படி நடந்ததா இல்லையா என்பது இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிகிறது. அதன் பிறகு முதலி, "இவர் என்றால் யார்? இவர் எப்படி உள்ளே வந்தார்? எதற்காக வந்தார்? எப்போது வந்தார்? கதவை இவருக்குத் திறந்தது யார்?" என்றான்.

உடனே காவல்காரன் வியப்படைந்து சந்தேகத்துடன் என்னைப் பார்த்தான்.

நான் உடனே, "நான் யாரென்பது தெரியவில்லையா?" என்று வினவியபடி சமரபுரி முதலி இருந்த இடத்தை நோக்கிப் போக எத்தனித்தேன். ஏனென்றால், எனக்கும் காவல்காரனுக்கும் நடுவிலிருந்த இடைவெளியை அதிகமாக்கிக் கொள்ள நான் விரும்பினேன். முதலியின் குரலோசை ஐம்பது கஜ தூரத்திற்கப்பாலிருந்த ஒரு ஜன்னலிற் கப்பாலிருந்து கேட்டதாகையால் அங்கே நான் போவதுபோல் நடித்தேன். நல்லவேளையாக காவல்காரன் என்னோடு வராமல் அங்கேயே நின்று கவனித்தான். நான் உடனே ஜன்னலருகில் போய் என்னுடைய குரலை மாற்றிக்கொண்டு பேசத் தொடங்கி, "நான் யாரென்பது தெரியவில்லையா? நான் முன்புறம் வருகிறேன். கதவைத் திறவுங்கள்" என்று கூறியபடி முன்புறத்திற்குப் போக யத்தனித்தேன். சிறிது தூரத்திலிருந்த் முடக்கில்

திரும்பி காவல்காரனுடைய பார்வையிலிருந்து மறைந்த உடன் வேகமாக ஓடி கட்டிடத்தை சுற்றிக்கொண்டு இன்னொரு பக்கத்தை அடைந்து, அங்கே மதில்க்கதவு ஏதாவது காணப்படுகிறதாவென்று பார்த்தேன். எதுவும் காணப்படவில்லை. எனவே, நான் மறுபடி பின்புறத்தை யடைந்தேன். அதே சமயத்தில் கட்டிடத்தின் முன்புறத்தில் கதவு திறக்கப்பட்ட ஓசை உண்டாயிற்று. காவல்காரன், "முன்னால் வந்த ஆளைக் காணோமே! எங்கேயோ போய்விட்டானே." என்று கூறிய குரலோசை உண்டாயிற்று. அதனால் அவன் அப்போது முன்புறம் போய்விட்டானென்பது நன்றாக விளங்கியது. உடனே நான் அங்கிருந்த தாழ்வாரத்தில் நுழைந்து பூட்டை மறுபடியும் திறந்தேன். பூட்டு சுலபத்தில் திறந்துகொண்டது. உடனே நான் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து கதவை மூடிக்கொண்டேன். அப்போது சமரபுரி முதலி, "அவன் முன்புறம் வந்தானல்லவா? மதில் கதவினருகில் ஓடிவிட்டான்போலிருக்கிறது. அதன்மேலேறி அப்பால் குதித்துவிட எண்ணுகிறான்போலிருக்கிறது; அங்கே போய்ப் பார்" என்றான். உடனே காவல்காரன் மதில் கதவினருகில் ஓடிப்போய் பார்க்க, அங்கு யாரும் காணப்படவில்லையாகையால், அவன், "இங்கே யாருமில்லை. கட்டிடத்தை சுற்றிக்கொண்டு பின்புறம் போய் அங்கிருந்து மைதானத்தின் வழியாய்க் கக்கூஸ் பக்கம் ஓடிவிட்டான்போலிருக்கிறது. அங்கே இருக்கும் கதவின்மேல்தான் அவனுடைய கவனம் சென்றது. அதன் வழியாக அவன் வெளியில் போக உத்தேசிக்கிறான்போலிருக்கிறது?" என்றான். முதலி, "அவன் யாரென்பது தெரியுமா?" என்றான்.

காவல்காரன், "அவன் யாரென்பது தெரியவில்லை" என்று கூறிவிட்டு, அவனுக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையை அவரிடம் தெரிவித்தான். முதலி வியப்பைத் தோற்றுவித்த குரலில், "அவன் அப்படியா சொன்னான்! அவன் இங்கே என்னிடம் வரவே இல்லையே. மதில் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. அவன் எப்படி உள்ளே வந்திருப்பான்! நீ கட்டிடத்தை ஒரு தடவை சுற்றிப்பார். பின்புறத்திலிருக்கும் தாழ்வாரத்தையும் பார்" என்றான். காவல்காரன் உடனே ஓடின காலடியோசை கேட்டது. அப்போது நான் கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுவிட்டு கதவின்மேல் சாய்ந்துகொண்டு நின்று, வெளியில் உண்டான காலடியோசையை

கவனித்தேன். தாழ்வாரத்திற்கு சரியாக வந்ததும் காவல்காரன் நின்றது தெரிந்தது. அப்பொழுது எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றியது. அதன்பிறகு காவல்காரன் மறுபடியும் ஓடியதுபோன்ற காலடியோசை உண்டாயிற்று. அவன் முன்புறம் போய்விட்டது போல் தோன்றியது. அவன், "கட்டிடத்தைச் சுற்றிலும் ஓர் ஈ காக்கையைக் கூட காணோம். பின் புறத்திலிருக்கும் தாழ்வாரத்தைப் பார்த்தேன். அங்கேயும் யாரையும் காணோம். நான் சொன்னபடி அவன் கக்கூஸி னருகிலிருக்கும் கதவிற்குத்தான் போயிருக்க வேண்டும்" என்றான். உடனே முதலி, "அப்படியானால் நாம் சீக்கிரம் போய் அவனைப் பிடித்துக்கொள்ள வேண்டும். நாமெல்லோரும் போகலாம்" என்றான். உடனே பலர் மைதானத்தின் வழியாக ஓடிய காலடியோசைகள் உண்டாயின. உடனே நான் தைரியமடைந்து முன்புறத்திலிருந்த அறையைக் கடந்து விளக்கெரிந்துகொண் டிருந்த அறையை யடைந்தேன். அங்கே யாரும் காணப்படவில்லை. நான் மேஜையண்டை போய், அதன் சொருகு பெட்டியை வெளியில் இழுத்து அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்தேன். உள்ளே ஒரு புஸ்தகபையில் ஏராளமான கடிதங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அதை எடுத்துக்கொண்டு சொருகுபெட்டியை மூடிவிட்டு, அருகிலிருந்த வாசலின் வழியாக வெளிப்பட்டு முன்புறத்தை யடைந்து முன்புறத்திலிருந்த மதில் கதவண்டை போய், பூட்டப்பட்டிருந்த பூட்டை நான் என்னுடைய கொத்துசாவியை உபயோகப்படுத்தித் திறந்தேன். பூட்டு திறந்து கொண்டது. அதை விலக்கிக் கையிலெடுத்துக்கொண்டு, கதவைத் திறந்துகொண்டு வெளியில் போய் கதவுகளை முன்போல் மூடி பூட்டைப் பூட்டிவிட்டு, அங்கிருந்து பெருநடையாக நடந்து எதிர்புறத்தில் சிறிது தூரத்தில் காணப்பட்ட மரத்தண்டை போய் அதன் மேலேறி மறைந்திருந்தபடி, மைதானத்திலும், கட்டிடத்திலும் என்ன செய்தார்கள் என்பதை கவனித்தேன். மைதானத்தின் இன்னொரு கோடியில் என்னைத் தேடிக்கொண்டிருந்த மனிதர்கள் என்னைக் காணமல் கட்டிடத்திற்குத் திரும்பிவந்தனர். அவர்கள் பேசியது என்காதில் படவில்லை. அவர்கள் அதன்பிறகு கட்டிடத்திற்குள் நுழைந்து விளக்கை எடுத்துக்கொண்டு மைதானம் முழுதும் தேடியபிறகு மறுபடியும் கட்டிடத்திற்குள் போய்விட்டனர். மேலும் சுமார் அரைமணி நேரம்வரையில் விளக்கெரிந்து கொண்டிருந்தது.

அதன்பிறகு கதவு தாளிடப்பட, விளக்கும் அணைக்கப்பட்டது. மறுநாள் காலையில் அங்கே வந்து, புதிதாக சமரபுரி முதலியிடம் வந்திருந்த மனிதர் காலவயிறன் பிள்ளை இருக்குமிடத்திற்குப் போகும்போது கூடவே நானும்போக வேண்டுமென்று நிர்மானித்துக் கொண்டு மரத்திலிருந்து கீழே இறங்கி வேகமாய் நடந்து என்னுடைய ஜாகைக்கு வந்து சேர்ந்தேன்.

அதன்பிறகு நான் அந்த பைலைப் பார்த்தேன். அதில் பல கடிதங்களும், பத்திரிகைகளிலிருந்து கத்திரிக்கப்பட்ட துண்டுக்காகிதங்களும் காணப்பட்டன. கடிதங்களெல்லாம் உபயோகமற்றவையாய் இருந்தன. அவைகள் சமரபுரி முதலியாருக்குச் சொந்தமான மைதானத்தை வாடகைக்குக் கேட்ட பலரிடமிருந்து வந்தவைகளாயிருந்தன. ஒரு காகிதத்தில் இந்த மாத சம்பளமான 35 ரூபாயைப் பெற்றுக்கொண்டதாய் ஒருவர் எழுதிய கடிதமும் காணப்பட்டது. அதனடியில் ஸ்டாம்பின்மேல் உலகநாதன் என்று கையெழுத்து செய்யப்பட்டிருந்தது. அதனால் சமரபுரி முதலியிடம் உலகநாதன் ஏதோ ஓர் உத்தியோகம் வகிக்கிறானென்பது நன்றாக விளங்கியது. அதோடு இன்னொரு விஷயத்தையும் நான் தெரிந்துகொண்டேன். அதாவது, முன்பு கந்தசாமி வாண்டையாருடைய வீட்டில் சமரபுரி முதலி, சின்னசாமி யோகீசுவரர் ஆகிய இருவராலும் எழுதப்பட்ட கடிதங்களைக் கண்டெடுத்தேனல்லவா? அதே கையெழுத்தைப்போல உலகநாதனுடைய கையெழுத்து காணப்பட்டது.

டாக்டர்:—(வியப்பைத் தோற்றுவித்த முகத்துடன்) அப்படியா! அப்படியானால் அந்த இரண்டு கடிதங்களும்—என்று மேலே ஏதோ கூறுவதற்குள்,

மற்றவர்:—உலகநாதனாலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று முடிவு செய்துகொண்டேன். உலகநாதன் சமரபுரி முதலியிடம் குமாஸ்தாவாதலால் அவனுடைய உத்தரவின்மேல் அவனுக்குப் பதிலாக கடிதம் எழுதியிருக்க வேண்டும். ஆனால் அவனுக்கும் யோகிக்கும் உள்ள சம்பந்தமென்ன என்பதை மேலே ஆராய வேண்டுமென்று நான் முடிவு செய்துகொண் [illegible] உலகநாதனுக்கும் ஏதோ சம்பந்தமிருப்பது [illegible] தாகையால், யோகி எப்படியும் உலகநாதனுக்குத் தன்னுடைய

இருப்பிடத்தைத் தெரிவித்திருக்க வேண்டுமென்றும், அவன் மூலமாக யோகியின் இருப்பிடத்தை அறியவேண்டுமென்றும் நான் கருதினேன்.

டாக்டர் :— சமரபுரி முதலிதான் யோகியென்று கண்டுபிடித்ததாய்ச்சொன்னீர்களே ! அவரை சுலபமாகப் பிடித்துக்கொள்ளுவதை விட்டுவிட்டு உலகநாதன் மூலமாய் ஏன் பிடிக்கவேண்டும்? அது மூக்கைப் பிடிக்க தலையைச் சுற்றிப் பிடிப்பதைப்போலல்லவா இருக்கிறது.

மற்றவர் :—காரணமில்லாமல் நான் அப்படிச் செய்வேனா ! ஏனென்றால் நீங்கள் சொல்லுகிறபடியே நேர்வழியாகப் போனால் சமரபுரி முதலியார்தான் யோகியாயிருந்திருக்கலாமென்னும் சம்சயம் உண்டாகிறது. மறுபடியும் நீங்கள் சொல்லுவதைப்போல சுற்றிக்கொண்டு போனால் யோகி யார் என்று வெளியாகிறது என்பதை அறிய விரும்பினேன். ஏனென்றால் எதையும் நிச்சயமாய் அறிய வேண்டுமேயன்றி அநுமானத்தால் மாத்திரம் சந்தேகிப்பது போதாது.

டாக்டர் :– (அதிருப்தியடைந்த முகத்துடன்) பிறகு என்ன செய்தீர்கள் ?

மற்றவர் :– மறுநாள் காலையில் உலகநாதனையும் கவனிக்க வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு பத்திரிகைத் துண்டுகளைப் பார்த்தேன்.

டாக்டர் :— (வியப்பும் ஆவலும் கொண்டு) அவைகளில் விசேஷம் என்ன ?

மற்றவன் :—அவைகளில் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு நடந்த விநோதமான ஒரு வழக்கைப்பற்றிய தகவல் காணப்பட்டது.

டாக்டர் :—6 மாதங்களுக்கு முன்பு அப்படிப்பட்ட விநோதமான எந்த வழக்கு நடந்தது ?

மற்றவர் :—தாமோதர முதலியாருடைய சங்கதிகளை நான் ஏற்கனவே உங்களிடம் சொல்லியிருக்கிறேனல்லவா ? அவர் ஒரு ஸ்திரீயால் சபிக்கப்பட்டது சம்பந்தமான வழக்கின் விவரம் இருந்தது.

டாக்டர் :— வழக்கின் விவரமென்ன ?

மற்றவர் :—திடீரென்று போலீஸாருக்குத் தகவல் கிடைத்ததன்மேல், ஒரு கொலை சம்பந்தமாக சப்-இன்ஸ்பெக்டர் தாமோதர முதலியார் சரவண முதலியார் என்பவரை அவருடைய வீட்டில் கைது செய்தாராம். அப்போது குற்றவாளி மயக்கமடைந்து படுத்திருந்தாராம். அவருக்குப் பல வைத்தியங்கள் செய்ததும் பலிக்காமல் போயிற்றாம். அவருக்குப் பொறிக்கலக்கம் ஏற்பட்டிருக்கலாமென்றும், வேறு பலவிதமாகவும் பலர் அபிப்பிராயம் சொன்னார்களாம். சுமார் நான்கு நாட்கள் அவர் அதே நிலைமையில் இருக்க, பிரபல டாக்டர்கள் சிலர் பரிசோதனைசெய்து, அவருடைய உடம்பில் எவ்விதமான கோளாறும் இல்லையென்று கண்டுபிடித்தார்கள். தம்முடைய குற்றத்தைத் தாமே ஒப்புக்கொள்ள அஞ்சியோ, போலீஸாரிடமிருந்து அவர்கள் ஏமாந்திருந்த சமயம் பார்த்து தப்பி ஓடிவிடலாமென்று நினைத்தோ அவர் அப்படிச் செய்திருக்கவேண்டுமென்றெண்ணி அதிகாரிகள் விசாரணையை நடத்தினார்கள். அவர் யாரைக் கொலை செய்ததாய் அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டதோ அந்த மனிதன் இறக்கவில்லை ; ஸ்மரணையற்றுப் போயிருந்து, பின்னால் எழுந்துவிட்டாராதலால், கோபத்தினால், மனிதனைத் தாக்கிய குற்றத்திற்கு சரவண முதலியாருக்கு ஒரு வருஷக் கடினக்காவல் தண்டனை கிடைத்தது. ஒரு வாரத்திற்குப் பிறகு வெளியான பத்திரிகையில் அந்த முதலியாருக்கு மயக்கம் தெளிந்ததாயும், தாம் நிரபராதியென்றும், தம்மைத் தமது தம்பி ஏமாற்றிவிட்டதாயும், அவனுக்கு பதிலாய் தாம் ஜெயிலிலிருப்பதாயும் கைதி கூறினாராம். உடனே, கைதி பைத்திக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாராம். இப்போது சமீபத்தில் வெளியான ஒரு பத்திரிகையில் நான் இந்த ஊருக்கு எந்த தினம் வந்தேனோ, அன்றுமாலை 6 மணிக்கு ஷை ஆஸ்பத்திரியிலிருந்து யாரோ இருவர் தப்பி ஓடிவிட்டதாயும், அவர்களில் ஒருவரது பெயர் சரவண முதலியார் என்றும், இன்னொருவரின் பெயர் ராமநாதன் என்றும் காணப்பட்டதுடன், அவர்களுடைய அங்க அடையாளங்களும் காணப்பட்டன. காலவயிறவன் பிள்ளை யென்னும் ராமநாதனுக்கு இருக்கும் அங்க அடையாளங்கள் சரவண முதலியார் என்ற பெயருடனிருந்த பைத்திக்காரனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. முகத்தில் கொப்புளங்க

ளுடன் வந்து சமரபுரி முதலியிடம் பேசிக்கொண்டிருந்த மனிதருடைய அங்க அடையாளங்கள் ராமனுதன் என்ற பெயருடன் கொடுக்கப்பட்டிருப்பதையும் நான் பார்த்து வியப்படைந்தேன்.

ஷை பத்திரிகை சரவண முதலியார் என்று யாரைக் குறிக்கிறதோ அவரை ராமனுதன் என்று அழைத்ததன் காரணம் என்னவாக இருக்கலாமென்று யோசித்தேன். எதிலோ ஏதோ தவறு ஏற்பட்டதால் அவ்வித ஆள் மாருட்டம் நேரிட்டிருக்க வேண்டுமென்று நான் தீர்மானித்துக்கொண்டேன். அவர்களிருவரும் பைத்தியக்காரர்களைப்போல் காணப்படவில்லை. அப்படியிருக்க டாக்டர் ஏன் அவர்களை ஆஸ்பத்திரியில் நோயாளிக் கைதியாக வைத்திருந்தார் என்பது எனக்கு ஆச்சரியமாயிருந்ததாகையால் நான் உடனே டெலிபோன் மூலம் கூப்பிட்டேன்.

டாக்டர் :—ஓஹோ! அப்படியா! அதற்காகத்தான் டெலிபோனில் என்னைக் கூப்பிட்டு, பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருக்கும் டாக்டர் யாரென்று கேட்டீர்களா?

மற்றவர் :—ஆம். அங்கே டாக்டர் உங்கள் தம்பிதான் என்று நீங்கள் சொன்ன பிறகுதான் தெரிந்தது.

டாக்டர் :—எதற்காக என்னை விசாரித்தீர்களென்று கேட்டதற்கு பத்திரிகையை தற்செயலாகப் பார்த்ததாகவும், இரண்டு பைத்தியக்காரர்கள் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டதாய்ப் படித்ததாயும், அதனுல் கேட்டதாயும் சொன்னீர்களே. நானும் பைத்தியக்காரத்தனமாய் அதை அப்போது உண்மையென்று நம்பிவிட்டேன். இப்போது நீங்கள் சொன்ன தகவல்களிலிருந்து அவர்கள் இருக்குமிடம் தெரிந்துவிட்டது; இதை நான் டெலிபோன்மூலம் என் தம்பியிடம் சொல்லவேண்டும். அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவியுங்கள்—என்று கூறியபடி நாற்காலியை விட்டு எழுந்திருந்தார்.

மற்றவர் :— அவர்களுடைய இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு, அதற்குமேல் என்ன செய்கிறது?

டாக்டர் :—அவர்கள் பைத்தியக்காரக் கைதிகள். அவர்களை மறுபடியும் கைதுசெய்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அடைக்க வேண்டுமல்லவா.

மற்றவர் :— அவர்களிருவரையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. இருவரும் பைத்தியக்காரர்களே அல்ல; நம்மைப்போல நல்ல நிலைமையிலிருக்கிறார்கள்.

டாக்டர் :—அது ஒருவகையான பைத்தியம்.

மற்றவர் :—அப்படியானுல், நாம்கூட அந்த வகுப்பில் சேர்ந்தவர்களே.

டாக்டர் :—இது என் தம்பியால் நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயம்.

மற்றவர் :—அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; அவரே இவர்களுடைய இருப்பிடத்தையும் கண்டுபிடிக்கட்டுமே.

டாக்டர் :—அப்படியானுல், நீங்கள் அதை என்னிடம் வெளியிட மாட்டீர்களா?

மற்றவர் :—இது உங்களுக்கு எதற்கு? இதுதான் உங்கள் தம்பியின் விஷயமாயிற்றே!

டாக்டர் : (சிரித்துக்கொண்டு) அப்படியானுல் அவனை நான் இங்கே வரவழைக்கிறேன். அவனிடத்திலேயே சொல்லுங்கள்.

மற்றவர் :—சரி; உங்கள் விருப்பம்போல் எதை வேண்டுமானுலும் செய்யுங்கள். நான் வந்து அதிக நேரமாய்விட்டது. அநாவசியமாய்ப் பேசி உங்களுடைய பொழுதை வீணுக்கிவிட்டேன்—என்று கூறிவிட்டு நாற்காலியை விட்டு எழுந்திருந்தார்.

டாக்டர் :—என் தம்பி வரும்வரையில் இருங்கள்.

மற்றவர் :—அதுவரையிலிருக்க எனக்கு அவகாசமில்லை.

டாக்டர் :—சரி; என் தம்பியை வரவழைக்கவில்லை. நடந்த விஷயங்களை மேலே சொல்லுங்கள்.

மற்றவர் :— (உட்கார்ந்துகொண்டு) அவர்களுடைய இருப்பிடத்தை சொல்லக்கூடாதென்ற எண்ணம் எனக்கு இல்லை. அதை வெளியிட விரும்பாததற்கு ஒரு காரணம் இருக்கிறது.

டாக்டர் :—என்ன காரணம்?

மற்றவர் :—அது உங்களுக்குத் தெரியாமலா போய்விடும்.

டாக்டர் :—அதிருக்கட்டும். பத்திரிகைத் துண்டுகளைப் படித்த பிறகு, டெலிபோன்மூலம் என்னோடு பேசினீர்கள் ; அதன்பிறகு என்ன செய்தீர்கள் ?

மற்றவர் :—அதன்பிறகு அந்த புஸ்தக பையில் மேலும் என்ன இருக்கிறது என்பதைப் பார்த்தேன். அதில் ராமனாதன் கைது செய்யப்பட்டதைப்பற்றிய விவரங்களடங்கிய வேறு சில பத்திரிகைத் துண்டுகள் காணப்பட்டன.

டாக்டர் :—அப்படியானால் ராமனாதனும், சரவண முதலியாரும் அண்ணன் தம்பிகளா ?

மற்றவர் :—நான் அம்மாதிரி சொல்லவில்லையே.

டாக்டர் :—அப்படியா ! ஆம். அப்படித்தா னிருக்கவேண்டும். ஏனென்றால் ஒரே சமயத்தில் அண்ணன் தம்பி ஆகிய இருவரும் ஒரேமாதிரியான குற்றத்திற்கு தண்டனை யடைவது அசம்பாவிதமல்லவா ?

மற்றவர் :—(புன்சிரிப்புடன்) அப்படியானால் ராமனாதனுடைய வழக்கின் விவரம் உங்களுக்குத் தெரியுமா ?

டாக்டர் :—தெரியும் ; அதை நான் பத்திரிகையில் படித்தேன். அதற்குமேல் என்ன செய்தீர்கள் ?

மற்றவர் :—பிறகு பத்திரிகைத் துண்டுகளை பந்தோபஸ்தான ஓர் இடத்தில் வைத்துவிட்டு நன்றாகத் தூங்கிவிட்டு, விடியற்காலையில் எழுந்திருந்து, சமரபுரி முதலி இருந்த கட்டிடத்தின் பக்கம் போய் மதிலுக்கு வெளியில் மறைந்திருந்தேன்.

டாக்டர் :—எதற்காக ?

மற்றவர் :—சரவண முதலியார் எங்கே போகிறார் என்பதையும், ராமனுதன் எங்கே யிருக்கிறானென்பதையும் கவனிப்பதற்காக.

டாக்டர் :—பிறகு ?

மற்றவர் :—அதே போல் அவர் வெளியில் வந்தபோது நான் அவரைப் பின்தொடர்ந்து, போய் காலவயிறன் பிள்ளையின் இருப்பிடத்தை யடைந்து அதன் அடையாளத்தைப் பார்த்துக் கொண்ட பிறகு, போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன் ; தாமோதர முதலியார்மேல் எவ்விதமான குற்றமுமில்லாமையால் அவரை விட்டு விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். அது முடிந்தபிறகு

இங்கே வந்து உங்களைப் பார்த்துப் பேசிவிட்டு தாமோதர முதலியாருடைய பிள்ளை என்ன நிலைமையிலிருந்தானென்பதை கவனித்தேன். அதன் பிறகு உலகனாதனுடைய வீட்டை யடைந்து அவனை கவனித்தேன்.

நான் அவனுடைய வீட்டையடைந்த சமயத்தில் அவன் புறப்பட்டு வெளியில் போவதற்காக தெருவில் வந்தான். அவனைப் பின் தொடர்ந்தேன். அவன் நேராக 1936-ம் நம்பர் ஜெவான் வீட்டை யடைந்து, திண்ணையில் சீட்டுக் கச்சேரி நடத்தினான். கன்னியப்பன், ஜெவான், இன்னும் ஒருவன் ஆகிய நால்வரும் அப்போது ஆடினர். நான் அவர்களறியாதபடி ரஸ்தாவின் ஓர் ஓரமாகப் போய் அவர்களிருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருந்த திண்ணையில் மறைவாக உட்கார்ந்துக்கொண்டேன். இரண்டு வீடுகளுக்கும் நடுவில் சுவர் இருந்ததாகையால், என்னை அவர்கள் பார்க்க முடியவில்லை. அடிக்கடி அவர்கள் சம்பாஷித்தபடியே சீட்டாடினர். அவர்கள் அநாவசியமானதும், உபயோகமற்றதுமான விஷயங்களைப் பற்றி இடை இடையில் பேசினார்கள் ; தாமோதர முதலியாருடைய பிள்ளையான மணிவண்ணன் ஆஸ்பத்திரியிலிருந்து அன்று வெளியில் வரப் போவதால், அவனை அன்று உதைப்பதற்காக ஆட்களை ஏற்படுத்தி வைத்திருப்பதாய் உலகனாதன் மற்றவர்களிடம் சொன்னான். மணிவண்ணன் எப்போது வெளியில் வருவான் என்னும் தகவல் அவனுக்கு எப்படித் தெரிந்ததுஎன்று மற்றவர்கள் கேட்டனர். அவன், தனக்கு நீங்கள் சிநேகிதரென்றும், நீங்கள்தான் அதை அவனுக்குத் தெரிவித்ததாயும் சொன்னான். அப்படியானால் உங்களுக்கு உலகநாதனைத் தெரியுமா ?

டாக்டர் :—(கோபத்துடன்) இது சுத்த அயோக்கியத்தனமாக வல்லவா இருக்கிறது. உலகனாதன் யாரென்பதே எனக்குத் தெரியாதே ! அப்படியிருக்க அவனிடம் நான் எப்படிச் சொல்லியிருக்க முடியும் ? நான் சொன்னதாகவே வைத்துக்கொண்டாலும், இன்றையதினம் மணிவண்ணனுக்கு உடம்பு சரியாய்விடுமென்று நான் இரண்டு நாட்களுக்கு முன்னாகவே எப்படிச் சொல்ல முடியும் ? நானும் சின்னசாமி யோகியா ?

மற்றவர் :—இருக்கலாம். அது எனக்கெப்படித் தெரியும்—என்று தமாஷாகக் கூறினார். டாக்டர் இரண்டொரு வினாடிகாலம் மௌனமாயிருந்தபின், “ அதன்பிறகு ?” என்று வினவினார்.

மற்றவர்:—பிறகு அவர்கள் அரைமணி நேரம் வேறு எதைப் பற்றியும் பேசவில்லை. உடனே போலீஸாருக்கு இந்தத் தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் முடிவுசெய்துகொண்டேன்.

டாக்டர்:—அப்படிச் செய்தீர்களா?

மற்றவர்:—ஆம் செய்தேன். இப்போது சற்றுமுன்பு மருந்து போட்டுக்கொண்டு போவதாக மணிவண்ணன் வந்தானல்லவா? இவன் பின்னாலேயே இவனுக்குத் தெரியாமல் இவனுடைய பந்தோபஸ்திற்காக இரண்டு ஜெவான்கள் வந்திருக்க வேண்டும். இவன் மேல் யாராவது கையை வைத்தால்கூட ஜெவான்கள் உடனே அந்த மனிதரைப் பிடித்துக்கொள்ளுவது நிச்சயம். அதிருக்கட்டும், உலகநாதன் சொன்னபடி ஜோசியம் பலித்து விட்டதல்லவா? அவன் சொன்னபடியே இன்றையதினம் மணிவண்ணன் ஆஸ்பத்திரியிலிருந்து போனது விநோதமல்லவா? ஆனால் நீங்கள் அவனிடம் அதைச் சொல்லவில்லையென்கிறீர்கள்.

டாக்டர்:—ஆம். இது விநோதமாகத்தானிருக்கிறது. யோசித்துப் பார்ப்போமானால், இதில் விநோதமொன்றுமில்லை யென்பதும் தெரியும். அவனுக்கும் சின்னசாமி யோகிக்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டுமென்று சொன்னீர்களல்லவா? ஒரு வேளை உலகநாதன் அவரிடம் ஜோஸியம் கற்றுக்கொண்டிருக்கலாம்.

மற்றவர்:—பெரிய யோகிக்கே ஜோஸியம் தெரியாமலிருக்க, அவருடைய சிஷ்ன் எப்படி ஜோஸியம் கற்றுக்கொள்ளப் போகிறான்?

டாக்டர்:—அப்படியானால் சின்னசாமி யோகிக்கு ஜோஸிய சம்பந்தமாய் எதுவும் தெரிந்திருக்காது என்கிறீர்களா! ஜோஸியத்தைப் பற்றி சிறிதுகூட அறியாமல் ஜோஸியனைப்போல் நடிப்பது சுலபமான காரியமல்லவே.

மற்றவர்:—நீங்கள் சொல்லுகிறபடியே வைத்துக்கொண்டாலும் உலகநாதன் அவ்வளவு புத்திசாலி என்று சொல்வதற்கில்லை. ஆகையால் அவனே அப்போதும் சொல்லியிருக்க முடியாது. ஒருவேளை யோகியே நீங்கள் சொல்லுகிறபடி தனக்குத் தெரிந்த சிறிது ஜோஸியத்தை வைத்துக்கொண்டு இந்த விஷயத்தைக் கண்டுபிடித்து அவனிடம் சொன்னாரோ என்னவோ?

டாக்டர்:—(திகம்பர சாமியாரின் முகத்தைப் பார்த்து) அப்படியுமிருக்கலாம். உலகநாதன் முட்டாளென்பது அவன் தெருவில் உட்கார்ந்து பேசியதிலிருந்தே தெரிகிறது. சரி, பிறகு என்ன நடந்தது?

திகம்பர சாமியார்:—கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சீட்டுக் கச்சேரி முடிவடைந்தது. ஜெவான் புறப்பட்டுப் போய்விட்டான். கன்னியப்பன் வீட்டிற்குள் போனான். உலகநாதனும் இன்னொருவனும் பேசியபடி அங்கிருந்து புறப்பட்டு நான் உட்கார்ந்திருந்த வீட்டின் பக்கம் வராமல், இன்னொரு திக்கில் தெருவோடு போனார்கள். நானும் உடனே எழுந்திருந்து திண்ணையை விட்டிறங்கி அவர்களுக்குப் பின்னாலேயே போக வாரம்பித்தேன். அவர்களிருவரும் தெருவுக்கோடியை யடைந்ததும் பிரிந்துபோய் விட்டனர். நான் உலகநாதனைப் பின்தொடரலானேன். அவன் முடிவில் ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். அது யாருடைய வீடென்பதை நான் அக்கம் பக்கத்தில் விசாரித்ததில், அது அரங்கசாமி முதலியாருடைய அத்தை வீடென்பதை அறிந்தேன். அங்கே அந்த அம்மாளுடைய பிள்ளையிருப்பதாயும், அவருக்கும் உலகநாதனுக்கும் சிநேகமென்று மறிந்துகொண்டேன். கொஞ்சநேரத்தில் அவன் வெளியில் வந்து உங்கள் தம்பி வசிக்கும் பங்களாவிருக்கும் தெருவிற்குப் போனான்.

டாக்டர்:—(வியப்போடு அவருடைய முகத்தை உற்றுப் பார்த்து) அந்தத் தெருவிற்கு எதற்காகப் போனான்?

திகம்பர சாமியார்:—அதை நான் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருதினேன். அப்போது உட்புறத்திலிருந்து யோகியினுடைய வேலைக்காரன் திடீரென்று வெளியில் வந்தான். அதைக் கண்டு நான் திடுக்கிட்டுப் போய்விட்டேன்.

டாக்டர்:—(வியப்புடன்) அங்கே அந்த வேலைக்காரன் காணப்படுவதற்கு எவ்வித முகாந்தரமுமில்லையே!

திகம்பர சாமியார்:—அது எனக்கும் ஆச்சரியமாயிருந்தது! உண்மையில் நல்ல நிலைமையிலிருப்பவர்களை பைத்தியக்காரர்கள் என்று சொல்லி ஆஸ்பத்திரியில் எப்படி அவர் வைத்திருந்தார், ஏன் வைத்திருந்தார், வேண்டுமென்றே அப்படிச் செய்தாரா, என்று ஏற்கனவே பல சந்தேகங்கள் தோன்றியிருந்தன. அதற்குத் தகுந்

தாற்போல் யோகியினுடைய வேலைக்காரனும் அந்த பங்களாவில் காணப்படவே உங்களுடைய தம்பிதான் யோகியாய் நடிப்பவரோ, இல்லாவிட்டால் யோகிக்கும் உங்களுடைய தம்பிக்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ, அந்த வேலைக்காரன் யோகியினால் அங்கே எதற்காகவாவது அனுப்பப்பட்டிருப்பானோ என்றெண்ணியபடி நான் மேலே என்ன நடக்கிறது என்று கவனித்தேன். வேலைக்காரன் தன் மடியிலிருந்து எதையோ எடுத்து உலகநாதனிடம் நீட்டினான். நான் தூரத்திலிருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தபடியால் அது என்னவென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. ஆயினும் அது ஒரு காகிதத்தைப்போல் காணப்பட்டது. உடனே அவன் அதை எடுத்துக்கொண்டு போகத் தொடங்கினான். அப்போது நான் அந்த வேலைக்காரனைத் தொடருவதா, அல்லது, உலகநாதனைத் தொடருவதா யென்று யோசித்தேன். உலகநாதனைத் தொடர்ந்து, அந்தக் காகிதம் யாரிடம் போய்ச் சேருகிறது என்று பார்த்துவிட்டு, அதன்பிறகு அந்த பங்களாவிற்கே திரும்பி வர யத்தனித்தேன். அந்த சமயத்தில் யோகியினுடைய வேலைக்காரன் என்னைப் பார்த்துவிட்டான்போலிருக்கிறது. அவன் உடனே பங்களாவிற்குள் ஓட்டமாக ஓடினான். அதனால் அவன் உங்களுடைய தம்பிக்கு நான் வந்திருக்கும் விஷயத்தைப்பற்றிச் சொல்லி எச்சரிக்கவே ஓடுகிறான் என்று நினைத்தேன். அவன் என்னிடம் அகப்படாமல் ஓடிப்போக விரும்பியிருந்தால், தெருவோடு போவது சுலபமான காரியம். அப்படிச் செய்யாமல் பங்களாவிற்குள் ஓடியது பல விபரீத சந்தேகங்களை—என்று கூறிவிட்டு மேலே ஏதோ கூற யத்தனித்தாராயினும் டாக்டர் எழுந்திருந்தமையால் அதோடு நிறுத்திக்கொண்டு அவரை கவனித்தார். டாக்டருடைய முகம் வெளுத்துப்போயிருந்தது. அவர் திகம்பரசாமியாரிடம், "இதனால்தான் என்னுடைய தம்பியிடம் நான் பேசும்படி நீங்கள் விடவில்லை. எனக்கும் பைத்தியக்காரர்களின் தகவல் தெரிவிக்கவில்லை. அதன் காரணம் இப்பொழுதல்லவா விளங்குகிறது. என்னுடைய தம்பிதான் இம்மாதிரியான மோசடிகளைச் செய்தவன். அவனைப் போலீஸார் பிடித்துக்கொள்ளப் போகிறார்கள். இதுதான் நீங்கள் கண்டுபிடித்த துப்புபோலிருக்கிறது—என்றார்.

பப்பநாபன்

கற்பதற் குரியவக் காலம் இறந்தது.
சொற்பிழை பொறுமின் ; தோன்றலெம் சேரமான்
பணிபுரி எளியேன்; பரிந்தவர் பொருட்டிவண்
அணுகினேன் ; தொழுவினில் அடியனைப் பூட்டுதல்
சேரனுக் கேயாம் ; சிறுமை நினையேல்.

கொல்லன்

சிறுமையும், பெருமையும் செவ்வனே அறிந்தையோ !
விரைவினில் தொழுவிவண் மேவிக் கொணர்குவீர்.
அதிலிவன் பகலெலாம் வதிவன் அமைதியாய்.

கமலினி

அஃதொரு பொருட்டோ ! அல்லினும் இவனதில்
இருந்தழு வானேல் எய்துவன் மிகுசுகம்.

பப்பநாபன்

அரசியே ! அடியேன் நினைவிழை தந்தையின்
அற்பமாம் குக்கலே ஆயினும் இங்ஙனம்
நடத்துதல் பொருந்துமோ ! நத்துமோ இதையவர் !

கமலினி

நத்துவர் பெரிதும், நன்மதி வருதலால்.
[ஏவலர் தொழுக்கட்டையைக் கொணர்ந்து வைக்கின்றனர்.]
பார்ப்பதி வரைந்துள பான்மையைச் சிறிதுஞ்
சோர்வறக் காட்டினன் துட்டனிச் சுணங்கன்.
அறைமின் றுடுக்கனை அக்கொடுந் தொழுவினில்.

குலசேகரன்

பொறுமின் கருணையால் ; புரிவது தகாச் செயல்.
மன்னவ ! தமியேன் மாற்றம் கொள்ளுக.
இன்னவன் செய்பிழை எளிதல; அதற்குத்
தகுவிதம் சேரமான் தண்டனை விதிக்கும்.
மிகஇழி சனர்க்கும், மிகைப்படாச் சிறுசிறு
பொருள்தமை வெளவிடும் புல்லவர் தமக்கும்
தருவதாம் தகைவிலித் தண்டனை சேரமான்

தூதனுக் கியையுமோ துடுக்கனே ஆயினும்.
தூதுவர் பெற்றிடு துன்பமு மிழுக்கும்
நாதனுக் காம்;அவை நல்கிடும் சினத்தை.

கோல்லன்

அன்னவர் சீற்றம் அறிந்ததே; புதுமையோ!
இன்னலே ததனால்; இடுவீர் தொழுவினில்.

கமலினி

சங்கரன் கொச்சியின் தலைமை அமாத்தியன்.
இங்கவ னெய்திய இழிவையு மேச்சையும்
அக்காள் அறியுமேல் அமைவளோ எளிதினில்;
மிக்காள் ஆவள் மீறும் சினத்தினால்.
பொறுக்கா தொருகணம் பூட்டுவீர் தொழுவினில்.
[ஏவலர் பப்பநாபனைத்தொழுக்கட்டையில் அடித்துவிடுகின்றனர்]
செருக்கனை விடுத்துயாம் செல்வோம் நாதனே!

[கோல்லனும் கமலினியும் செல்லுகின்றனர்]

குலசேகரன்

வீணையா, சாலயான் விசன மெய்தினேன்.
கொல்லன் பிடியில் குரங்கை மீறுவான்;
கொல்லனு மஞ்சான் குணக்கே டுடையான்.
என்னினு முயல்கிறேன் இன்னொரு முறையான்;
முனிவை யகற்றியிம் முடக்கலை நீக்குவேன்.

பப்பநாபன்

ஐயனே, அங்ஙனம் செய்யேல் இறைஞ்சினேன்.
நையா உரமனம் நயந்தால் மாறுமோ!
நடப்பன யாவும் நன்மைக் காதலின்
கிடந்திது துய்ப்பேன்; கேள்வி பிறக்கும்.

குலசேகரன்

என்னைகொல் வேதனை! ஏந்தலெம் சேரமான்
இன்னலைக் காண்பரேல் எங்ஙன மாழ்வரோ!

[போய்விடுகிறன்

பப்பநாபன் (தனக்குள்)

மன்னரே வாரீர், மாண்பிது பாரீர்.
முன்னவள் தணத்துப் பின்னவள் நாடினம்;
விடுத்து மடக்கை விழுந்தனம் அடுப்பில்.
அன்னவள் மாறினள் அருங்குணக் குன்றமாய்.
என்னைகொல் உலகம்! இன்னவர் மக்களோ!
இன்னலும் ஏய்ப்புமே இருந்தவே எங்கணும்.
சிறியதைப் பெரியமீன் தின்பது போலவே
முதியரைப் புதியவர் முற்றுதல் முறையோ!
சுயநலன் தொலைக்கும் தொடர்பையு மன்பையும்;
பயந்தவ ராயினும் பற்றை யொழித்திடும்;
மானமும் தானமும் மாண்பும் தணக்கும்.
போகா தென்னுயிர் புரண்டதே ஊசலாய்!
ஆகா! துயிலேன் அழுத்திய திமைகளே!
நனிஇழி நவைஇது காணல் பொறுததம்
நனவை இழந்திட நாடின வோவிழி.
இன்பமும், துன்பமும், இன்மையும், செல்வமும்
நன்பகல் இரவுபோல் நண்ணின முறைமுறை.
ஒளிர்பகல் உறுமென உரமா யுன்னியான்
குளிரல் துயில்வேன் குந்திய நிலையிலே.

[கால்களில் தொழுக்கட்டையுடன் உட்கார்ந்திருந்தபடி
துயிலில் ஆழ்கிறன்]

இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

[குலசேகரனுடைய மாளிகைக்கு வந்த சங்கரனும், பப்பநாபனும் ஒருவரை யொருவர் காண்கின்றனர். சங்கரன் கமலினியிடத்தில் ஏதோ கோள் மூட்ட வந்திருக்கிறானென்று பப்பநாபன் கருதி ஆத்திரம் கொண்டு, அவனை வைது அடிக்கிறான். சங்கரன் கூச்சலிடுகிறான். அப்போது கமலினியும், கொல்லத்தரசனும், குலசேரனும் அங்கே வந்து அவர்களது பூசலை நிறுத்த முயலுகின்றனர். பப்பநாபன் அப்போதும் ஆத்திரத்தோடு சங்கரனை அடிக்கிறான். கொல்லத்தரசன் அவர்களை

அதட்டி, அவர்கள் அவ்வாறு பூசலிடுவதன் காரணமென்னவென்று வினவுகிறான். இருவரும் தம் தம் நியாயத்தை எடுத்துக் கூறுகின்றனர்; பப்பநாபன் அப்போதும் தனது ஆத்திரத்தை அடக்காமலேயே மொழிவதால், கொல்லத்தரசன் கோபம் கொண்டு, ஏவலரைக் கூவி, பப்பநாபனைத் தொழுக்கட்டையில் அடிக்கும்படி உத்தரவு அளிக்கிறான். அவ்வாறு செய்வது சரியல்லவென்று குலசேகரன் நியாயம் கூறுகிறான். கொல்லத்தரசனும், கமலினியும் அதை ஏற்காமல், அவனைத் தொழுக்கட்டையில் மாட்டச் செய்துவிட்டுப் போகின்றனர். குலசேகரன் பப்பநாபனுக்கு அநுதாபமொழிகள் கூறிவிட்டு, அவனை விடுவிக்க தாம் மறுபடியும் முயல்வதாய்ச் சொல்லிப் போகிறான். பப்பநாபன் தொழுக்கட்டையில் கிடந்து தத்தளித்து முடிவில் துயிலில் ஆழ்ந்துபோகிறான்.]

காட்சி—3

[சேரனது நகரத்திற்கு அருகில் உள்ள ஒரு தோப்பு. மாதவன் பைத்தியக்காரன்போல் தன்னை அலங்கோலம் செய்துகொண்டு, எவரும் தன்னைப் பார்க்காதபடி மறைந்து பதுங்கிச் செல்கிறான்]

மாதவன் (*தனக்குள்*)

என்னே கொடுமை! என்றனைப் பிடித்தால்,
பொன்னோ ராயிரம் பொருட்டிலா தளிப்பதாய்ப்
பறையறை வித்தனர் பற்றிலா எந்தையார்;
சிறையினில் அடைப்பரோ, சிரத்தையே அறுப்பரோ!
எந்தவி டத்திலும், எத்தகை மனிதரும்,
சிந்தனை இதுவாய்ச் செப்பினர் மொழிகளை;
ஓடினர் எங்கணும், தேடினர் ஊக்கமாய்.
நாடினேன் மறைவிடம்; நான்கு திசையிலும்
அன்னவர் சூழ்ந்தனர்; ஆவலோ டாய்ந்தனர்.
என்னைகொல் புரிகுவேன்; எங்ஙனம் மறைகுவேன்;
தங்கும் புகலிடம் எங்கும் கண்டிலேன்.

எத்திறால் விலகி ஏகலே நலனாம்.
பித்தம் பிடித்தவோர் பேயனாம் கல்லுளிச்
சித்தனைப் போலயான் செவ்வனே மாறுவேன்;
அழுக்குள கந்தையாம் ஆடைகள் பொறுக்கி
இழுக்கிலா தென்றன் இடையில் கட்டுவேன்;
கரியை எண்ணெயிற் கலந்தது பூசியே
உருவை மாற்றுவேன் உணரா வகையான்;
தலையெலாம் ஆலின் பாலைத் தடவிப்
பொலிவிலாச் சடைகளாய்ப் புதுக்குவேன் சிகையை;
ஓட்டைச் சட்டியும், ஒடிந்த கட்டையும்,
பீற்றல் கூடையும், பிடியிலாக் கத்தியும்,
கல்முள் கந்தையும், காக்கையின் இறகையும்,
தேங்காய்க் குடுமியும் சேமித் தவைதமை
நீங்கா நிதியமாய்த் தாங்கி உய்குவேன்.
விலங்கெனை எள்கி விலக்கிடு நிலைமையில்
இலங்குவேன்; ஐயமென் றிருகரம் ஏந்துவேன்;
கந்தையை நோக்குவோர் கல்லடி தரினும்,
சிந்தியேன்; செவ்வனே ஏற்பேன் யாவையும்.
சத்திரம் சாவடி சயனமாளிகைகளாய்க்
குத்தகை கொள்வேன்; பித்தனாய் நடித்துச்
சிறியோர் யாவரும் சிரித்துப் பின்வரப்
பெரியோர் இழிமொழி பேசி வெருட்டிட
ஆடியும், பாடியும், அழுதும், நகைத்தும்,
ஓடியும், ஒளிந்தும், உயிர்ப்பிண மாவேன்.

[போகிறான்]

இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

நகரத்திற்கு அருகில் இருந்த ஒரு தோப்பிற்குள் சென்ற மாதவன், தன்னைப் பிடித்துக் கொடுப்போருக்கு ஆயிரம் மோகரா அளிப்பதாய்த் தன் தந்தை பறையறை வித்ததையும், அதைப் பெற ஆசை கொண்டு ஜனங்கள் தன்னைத் தேடிக் கொண்டிருந்ததையும் உணர்ந்து, தான் தப்பும் வழியை சிந்

திக்கிறான். தான் கரியை அரைத்து உடம்பில் பூசி, அழுக்கடைந்த கந்தைகளை அணிந்து, பைத்தியக்காரன் போலவும், கல்லுளிச் சித்தன் போலவும் மாறிச் செல்லத் தீர்மானித்துக் கொண்டு நடக்கிறான்]

—:0:—

காட்சி—4

[குலசேகரனது மாளிகைக் கருகில் சேரன், விகடன், வீரர்கள் ஆகியோர் வருகின்றனர்]

சேரன்

கடிதம் பெற்றதும் கமலினி இங்ஙனம்
கடுகிய தென்கொலோ காதலன் தன்னோடு ?

ஒருவீரன்

நேற்றின் குற்றிடு நினைவே இலதாம்.
காற்றென வந்தனர் கடிதம் நோக்கவே.

[அப்போதும் தொழுவில் அடிபட்டுக் கிடந்த பப்பநாபனை அவர்கள் நோக்குகின்றனர்.]

பப்பநாபன்

அத்தனே வருக! அடிமை இறைஞ்சினேன்.

சேரன் (வியப்பும், முனிவும் கொண்டு)

இத்தகை உயர்வில் இருத்தின ரோநினை!
பொழுதுபோக் கிடவிது புதிதொரு வசதியோ!

விகடன்

பிணைப்பர் முகத்தால் பீடுறு பரிகளை;
இணைப்பர் கழுத்தினால் இழிவுறு காடிநாய்;
மந்தியின் இடுப்பை வளைத்துக் கட்டுவர்;
வந்தவிம் மனிதனை மடக்கினர் கால்களால்.
காரண மறிந்தோர் கழறுவீர் கடிதல்.

சேரன்

சேரனுக் கிப்பெரு சிறப்பும் சேருமோ!

விகடன்

மனதைக் காலில் வைத்தனிர்; அதற்கவர்
இனிமை பயந்திட எண்ணின ராதலின்
கால்களால் தூதனைக் கட்டி வீழ்த்தினர்.

சேரன்

எவனிழி செயலிது இழைத்தனன் விசையா ?

பப்பநாபன்

அவனவள் இருவரும் அகமகிழ்ந் துதவினர்.

சேரன்

பொய்மொழி செப்பினை புனிதரே அன்னவர்.

பப்பநாபன்

மெய்மொழி யேஇது ; விளம்பேன் கட்டுரை.

சேரன்

நிந்தையே மொழிகிறாய் நிச்சயம் சத்தியம்.

பப்பநாபன்

நிந்தையாய்க் கனவாய் நிகழ்ந்தன ஆகுக.

சேரன்

அதிசயம் அதிசயம்! அனைத்தினும் அதிசயம்!
இதுசெய வெங்ஙனம் இயைந்தனர் அன்னவர்!
விருப்பிது கொள்வரோ! விரும்பினும் கூடுமோ!
பெரிதும் பூசனை பெறத்தகு மென்றனுக்
கிப்பெரும் கொடுமையும் ஈனமும் இழைத்திடல்
ஒப்பிலாக் கொலையினு முக்கிர மல்லவோ?
நின்பால் அன்னவர் வெகுண்டிடு நிமித்தமென் ?
முன்பிவண் போந்ததால் மூண்டதோ சீற்றம் ?

பப்பநாபன்

தங்கள் நிருபம் தாங்கிக் கொல்லம்
தங்கிய இவர்வயின் சார்ந்தேன்; பணிவுடன்
ஈந்தேன்; அக்கணம், இழிந்தோன் சங்கரன்

போந்தான் ; எதையோ புகன்றான் ; பார்ப்பதி
வரைந்தவோர் நிருபம் வழங்கினான் ; இருவரும்
விரைந்தனர் எழுந்தனர் மேவினர் இத்தலம் ;
கடுமுகம் என்பால் காட்டினர் ; இங்ஙனம்
விடைவரைந் தீவதாய் விளம்பினர். தொடர்ந்தேன்.
சங்கரத் திமிரனும் சாரவே வந்தனன்.
நங்கையர் பற்றையு நலனையும் போக்கிய
காதக னாதலின் காணயான் முனிந்தேன் ;
யாதையும் அறியாப் புதியவன் போலவன்
என்னொடு மொழிந்தான் ; இயம்பிய பொருதுயான்
துன்னினேன்; இருவரும் தொடுத்தனம் கைப்போர்.
கொடுத்தேன் குத்துகள் ; கோழையன் நீலிபோல்
எடுத்தான் புலம்பலை, இறைந்தே கதறினான்.
உரம்படக் கூவியே ஓவென அலறினான் ;
அரயனு மரசியும் அணுகினர் வினவினர் ;
அக்காள் அன்பையே மிக்கம தித்தவர்
பக்கமே சார்ந்து பரிந்தெனை முனிந்தனர் ;
விழுமிய தாகுமித் தொழுவெனக் களித்தனர்.
அவர்பால் அணுவெனும் தவறுயான் செய்திலேன்.
செம்மல் வருந்துமே என்றனர் சேகரர் ;
அம்மையே தாங்கினர் அக்காள் உணர்ச்சியை.

விகடன்

அரண்மனைப் பூனைமுன் அயலார் யானையும்
சரணென வணங்கித் தாழ்தலே முறையாம்.

சேரன்

விந்தையில் விந்தையே! நொந்ததென் மெலிஉளம்.
திண்ணிய துயரமே, திரைகடல் போலநீ
நண்ணியேன் பொங்கினை! நான்பொற வல்லனோ!
என்னே காலம்! இங்ஙனம் திரியுமோ!
இன்னோர் வீரன் ஏகினன் செப்பிட ;
இன்னமேன் கமலினி எதிர்கொளா திருந்தனள் ?

[குலசேகரன் வருகின்றான்]

குலசேகரன்

மன்னவர் ஏறே வணங்கினேன் தாள்களில்.

சேரன்

கண்நிகர் செல்வியாம் கமலினி கண்டிலேன்.

குலசேகரன்

அண்ணலே! நிமித்தம் அறிகுவீர் ; அன்னவர்
கொல்லத் திருந்திவண் குரகத மூர்ந்ததால்,
மெல்லிய யாக்கை மிகவே நொந்ததாம்.
இன்னல் தொலைந்தபின் ஏகுவர் கண்டிட.

சேரன்

என்கொலோ புதுமை! இங்ஙன முரைப்பளோ!
பெண்கொலோ சொற்றனள்! பேசுதல் பொய்ம்மையோ!
கொல்லனேன் வந்திலன்? குணக்கோ அவர்க்கும்?
இல்லையேல் அச்சமோ என்பால் துன்னிட ?

குலசேகரன்

மந்தியின் பிடியினன் ; மாபெரும் சினத்தான்.
புந்தியில் எளியவன் ; புகல்வது கேளான்.

சேரன்

அத்தகை நலன்கள் அவன்மாட் டுளவோ!
இத்துணை நாட்களில் இஃதையான் உணர்ந்திலேன்!
காற்றொடு பெருந்தீ கலந்த சேர்க்கையும்
தோற்றதே இவர்தம் தொடர்பிற் கெதிரில்.
பாசம் துறந்தவிப் பாதகர் இருவரும்
நாச மெய்துவர்! நாணிலா வஞ்சகர்!
மந்திரிப் பெரியீர்! இந்தவென் றாதனைத்
தொழுவில் பூட்டிடத் துணிந்தன ரேயவர்!
இழிவிது விலக்குவீர் ; எழுப்புவீர் தூதனை.
ஒருகணம் அவருடன் உரைசெய விரும்பினேன்.
விரைவில் அழைமின் ; வேண்டலை மறுக்கின்,
யானே புகுவேன் அன்னவர் சமுகம்.

குலசேகரன்

அமைக, அடியேன் அகன்றுடன் மீளுவேன்.

[போகிறான்]

சேரன் (தனக்குள்)

தளர்ச்சியில் என்றனைத் தாங்குவர் என்றுயான்
உளங்கொண் டிரிந்ததால் உற்றன வோ இவை!
பயனிலா தொழிந்ததோ பாழ்நினை வெல்லாம்.
முயன்றேன் ஒன்றையான் ; முடிந்ததே வேறாய்!
புன்மைக் குணமே பொதிர்ந்ததே அவனியில்!
என்னுளம் கொதிப்பதேன்? என்னும் அதனால்.

[கோல்லத்து அரசன், கமலினி, குல சேகரன், ஏவலர் ஆகியோர் வருகின்றனர்]

சேரன்

புரவி அலுப்பெலாம் போனதோ இதற்குள்!
விரவிய ததிசயம்! மிகுபே ரன்பாம்.

கமலினி

வருக வெந்தையே! மகிழ்ந்தேன் வரவால்.

[ஏவலர் பப்பநாபனை விடுவிக்கின்றனர்]

சேரன் (பப்பநாபனை நோக்கி)

பதங்கள் இரண்டும் பாங்கோ வீசையா?
விதியோ, காரியின் சதியொ, வினையோ?
கோதாய் கமலினீ, கொச்சியின் வஞ்சகி
தீதே புரியினும் இதற்கிணை செய்திலள்.
அன்னவள் பற்றிலா வன்மொழி யுட்புகுந்
தென்னுளம் புண்ணுற இதய மிரண்டாய்ப்
பிளவுறப் புரிந்தது. பிழைதமை நாக்கொடு
விளம்புதற் காற்றேன் ; மிகஇழி செயலது
மெய்யோ வென்றுநீ வினவுவை வியப்பொடு.

கமலினி

ஐயனே! வந்த அயர்வினால் மயங்கினீர்.
முதியவள் மூட மதியினள் ஆவளோ!
அன்னவள் தன்கடன் அறிந்தவள் செவ்வனே ;

இன்னலே புரியாள் ; இளக்கரம் பொருந்துமோ!
என்னரும் சோதரி இழிசெய லெதையும்
இந்நில மழியினு மியற்றா ளுறுதியே!
துடுக்கும் தூர்த்தமும் தோற்றநும் வீரரை
அடக்க முயல்வது அடாச்செய லாகுமோ?
நன்மையே கருதிய நங்கையாள் இயல்பு
புன்மையாம் என்பது புத்தியின் குறையே.

சேரன்

மதியிலி என்றெனை மதித்தையோ? ஒக்கும்.
அதுவே இத்தகை அல்லல் கொடுத்தது.

கமலினி

அண்ணலே! முதுமையில் அறிவெங் கிருக்கும்.
மண்ணுல கத்தின் வரம்பி லிருந்தீர்.
யாக்கையு மனதும் அயர்ந்தன ; மற்றவர்
போக்கில் ஒழுகலே மாண்பை அளிக்கும்.
மாறுதல் உற்றதை மற்றவர் அறிவர் ;
நீரதை அறியீர் ; நிச்சய மிதுவாம்.
ஆதலின் தாதைநீர் சோதரி மாட்டுடன்
போதலே முறையாம் ; போற்றுவள் உந்தமை.
ஒருமதி தீர்ந்தபின் உறுவீர் என்வயின்.

சேரன்

போற்றுவ ளோஎனை! கூற்றுவ னேயவள் ;
இறப்பேன் எங்கெனும் ; இனிமுகம் பாரேன்.
வஞ்சகி விரைவினில் மாதுயர் வகிப்பாள்.
நஞ்சை எவரே நத்துவர் உலகில்.
அவளிடம் செல்லவோ அளித்தனை கட்டளை!
நவின்றது புன்மையாம் ; நவையே கருதினை.
யாக்கை தளரினும், அறிவிலும், கண்ணியப்
போக்கிலும் தளர்கிலேன் ; புன்மைநன் றுணர்ந்தேன்.
சிறுமிநீ சிறப்பினால் பெரியவள் ஆவதால்,
பெரிதும் நின்னையான் பேணி வணங்கினேன்.
நின்பால் வதிவேன் ; நின்கூழ் அருந்துவேன்.
அன்பால் உதவுவாய் ; அதிகம் வேண்டிலேன்.
[சேரன் அவளைப் பணிகிறான்]

கமலினி

காண்போர் நகைப்பர் ; கண்ணிய மோவிது !
வீண்மொழி கேளேன் ; விரைவீர் அவள்பால்.

சேரன்

இந்தவென் பிறப்பில் ஏகேன் அவள்வயின்.
சிந்தையில் அன்னவள் சிறுமியிற் சிறுமியாம் ;
ஐம்பது வீரரை அகற்றினள் கணத்தில் ;
அன்பிலா ஆணவம் காட்டினள் ; அரவின்
கடுவினும் கடியபன் மாற்றம் கழறினள் ;
விடியாள் பாதகி ; விரைவினில் அழிவாள்.

கமலினி

சினக்கும் செல்வமே திரண்டது முதிர்ச்சியால் ;
எனக்கும் அதுவே ; என்னையும் தூற்றுவீர்.

சேரன்

அங்ஙன நினையேல் அருங்குணக் கமலினீ !
பங்கய வதனம் படைத்தனை ; நின்னையான்
எத்தின முனிந்தேன் ! இளகு முளத்தினீ ;
நத்தாய் கொடுமையை ; நல்காய் வன்மொழி ;
முன்னவள் வதனமோ வன்னியை வென்றது.
அன்னவள் தந்தையை அகற்றினள் கொடுமையால்.
இரங்கு மியல்பே நிரம்பிய துன்பால்.
கறங்கென மாறாய் ; கருணை யிலாமலென்
வீரரை விலக்காய் ; வேண்டா வெறுப்போ
டேவலர் என்பால் இயங்கல் தடுப்பாய் ;
மேவிடு பசியெனை மிகவு மொறுத்திட
இளக்கர மாயவர் இருந்திடல் விரும்பிடாய் ;
வளர்த்தவ னென்பால் வாஞ்சனை துறவாய்.
கான்முளை யவர்தம் கடமையு நன்றியின்
பான்மையு நற்குணப் பண்பையு மறிவைநீ.
என்பெரு நாட்டின் நன்பெரு பாதிநீ
பெற்றதை மறந்திராய் ; பேணுவாய் நீயெனை ;

கமலினி

வருமதி என்முறை; வருவீர் அதனில்.
அக்காள் மதியிது. அவளெனை முனிவள்.
எக்கோள் மொழியெனும் இறையெனும் நம்பேன்.
தயைபுரிந் தேகுமின் ; தங்குமின் அவள்வயின்.

சேரன்

பயந்த வெனக்குநீ பகர்மொழி இதுவோ !
பிக்குணி யோ யான் ! பெரிது முவந்தேன்.
தக்கண மகலுவேன்; தங்குவேன் சந்தியில்.
பெண்களின் முறையும், பேணலும் வேண்டேன்.
வண்மையே காட்டினீர் வஞ்சியர் இருவரும் ;
ஒழுகிய துயர்வே ; உற்றவென் பணிஞனைத்
தொழுவினில் மாட்டிய துடுக்கன் யாவன் ?
[அப்போது சங்கரன் அங்கு வருகிறன்]

சேரன்

சங்கரக் குப்பையே, இங்கணும் சார்ந்தையோ !

சங்கரன்

வந்தனர், அரசியே, மாண்புகூர் தமக்கையார்.

கமலினி

தந்தையே, பார்ப்பதி தகைமை குணிப்பீர் ;
உந்தமை அழைக்க உற்றனள் உடனே.

சேரன்

அன்னவள் தகைமைநன் கறிந்தே னங்குயான்.
பன்னுதல் மிகையாம் ; பண்பினில் ஒத்தனிர்.

கோல்லன்

முதியரே அங்ஙனம் முனிதல் முறையல.
[பார்ப்பதி வருகிறள்]

சேரன் (கோபத்தோடு)

இங்கும் வந்தையோ இழிமனக் குறத்தியே !
பங்கம் புரிந்தனை ! பதர்போல் நடந்தனை !

வெட்க மிலாதிவண் விரைந்தனேன் இவள்பால் ;
கட்கம் போன்றதிக் காதகி தொடர்வு.
மொழியேல் கமலினீ, மூத்தவஞ் சகியுடன் ;
இழிகுணச் சிதடியா மிவள்கரம் தீண்டேல்.

பார்ப்பதி

கழன்றது கேட்டையோ கமலினித் தங்காய்!
இழிந்த சொற்களும், ஏச்சும், பூசலும்
நிமித்த மிலாமலே நிரம்பின கொச்சியில்.
முதுமையின் முடிவிது ; முழுதுமுன் மத்தமே!
கதுமென இங்ஙனம் கடுகினர் காற்றென.
தந்தையார் இங்ஙனம் தங்க இயைவையேல்
நிந்தை எனக்காம் ; நிகழ்ந்ததை அறியா
உலகம் பழிக்கும் ; உறுமதி நின்முறை ;
கலகம் விடுக்கக் கழறி யனுப்புவாய்.

கமலினி

தந்தையே, பார்ப்பதி தந்தனள் தகுமொழி.
சிந்தையைத் திருத்திச் செவ்வனே ஒழுகுமின்.

சேரன்

இனமே நாடிடும் இனம்எனல் பலித்தது.
மனமே! நீ ஏன் வருந்தினாய்! பதறேல்.
பணிஞனைத் தொழுவிற் பிணித்தவன் யாவன் ?

கோல்லன்

பணிஞன் வெறிக்குப் பலனிது பெற்றான் ;
எந்தம் விருப்பினால் ஏவலர் பிணித்தனர்.
வந்தாம் பணிமகன் வைதனன், அடித்தனன்,
சங்கரன் கதறினும் தந்தனன் உதைகளை.
எங்களை உரப்பினன் ; எதிர்த்து மொழிந்தனன்.
பொருட்டிலா தெம்வயின் புன்மொழி கூறினான்.
வெருட்டல் வீண்பட, வீட்டினம் தொழுவில்.

சேரன்

நீரோ புரிந்தது! நிச்சய மோஇது!

கமலினி

ஓரீர் புகன்றது ; உற்றத நீதியோ ?
முதிர்ச்சியில் அமைதியே முறை;அது விலக்கி
அதிர்ச்சி புரிதலில் ஆம்பயன் என்கொல் ;
ஐம்பது வீரரை அகற்றிநற் றமக்கையாள்
தன்பதி ஏகித் தங்குவீர் பொறையுடன் ;
இம்மதி முற்றுமங் கிருந்திவ ணெய்துவீர்.

சேரன்

வீரரை விலக்கி விதுரனே யாவதோ!
சேரனுக் கிப்பெரும் சிறப்பே தருதியோ!
யோதும் போதுமுன் புத்தியை மெய்ச்சினேன் ;
ஓதிய புன்மையை ஒப்பேன், வகியேன் ;
காடே வீடாய்க் கடும்புலி நட்பாய்,
ஓடே பொருளாய், உடுக்கையா யிலைதழை,
நாடிப் பெயருவேன் ; நவின்றேன் திண்ணமாய்.
இவளுடன் குலவலைக் காட்டினும் என்பால்
நவைபுரிந் தகன்ற நங்கையை வெறுமையில்
ஏற்றழைத் தேகிய இலங்கை யரசனைப்
போற்றிப் பணிந்து புழுக்கைபோல் உய்யலாம்.
பார்ப்பதிக் குறத்தியைப் பணிந்துயிர் வாழ்வதில்
ஏற்புடைத் தாகும் இங்குள சங்கரக்
குப்பையைத் தொடரும் குக்கலே ஆவது.

பார்ப்பதி

எதுநுமக் கியைவோ, அதுநீ ரேற்கலாம்.

சேரன்

பணித்தது புரிவேன் பார்ப்பதி அம்மையே!
குணத்திற் கடுத்ததே கூறினை ; மகிழ்ந்தேன் !
வருத்தே னினியுனை ; மறப்பேன் அறவே.
இறத்தல் வரையான் எதிர்ப்படேன் நின்முன்.
உதிரம் கெடுதலால் ஓங்கி நிறைந்து
பொதிரும் பிளவைகள், புண்சொரி சிரங்குகள்
யாவுநம் மக்களே ; அங்ஙன முதித்தனை.

ஒறுத்துயிர் குடிக்கும் உதிரப் பிளவைபோல்
வருத்தி வதைக்கினும் மகளே யாதலால்,
அன்னவள் சுகப்பட ஆண்டவர் அருளையே
நாடினேன் ; அவட்குயான் நன்னிலை கோரினேன்.
கூடிய என்சிறு குழுவுட னினியான்
கமலினி மனைதனிற் காலம் கடத்துவேன்.

கமலினி

கூடாக் காரியம் குறித்தீர் ஐயனே !
நாடா இடத்தை நாமே அடைவது
கண்ணிய மாமோ ? கதுமென யாங்கள்
நண்ணின மித்தலம் ; நகருவோம் வேறிடம் ;
என்னுடன் இருத்தல் ஏலா வமயமாம்.
முன்னவள் முறையிது. முன்புயா னேற்றால்,
அக்காள் என்னுடன் மிக்கப் பிணங்குவாள்.
இக்கால் அவளுடன் ஏகுவீர் அமைதியாய்.

சேரன்

எத்தகை யதிசயம்! இங்ஙன முரைப்பரோ !

கமலினி

நத்தினேன் நடுநிலை ; அதிசயம் ஏதிதில் !
உண்ணல், உறங்கல், ஓரிடத் திருத்தல்
எண்ணிய நுமக்கேன் இவ்வீ ரர்குழாம்.
அரண்மனை வீரர் அனைவரும் நும்மவர்.
திரள் பிறர் தேக்குதல் தீங்காம் அகற்றுவீர்.

பார்ப்பதி

ஏவலர், விருதினர் எனைவரோ இருந்தனர் ;
ஏவிய புரிவர் ; ஏனோ ஏனையோர் ?

கமலினி

மெய்யே புகன்றனள் ; வீரரேன் வீணிலே.
ஐயநும் பணியில் அன்னவர் பிழைக்கின்,
உரப்பி அகற்றுவோம் ; உமக்கேன் கவலை.
வருமதி இங்ஙனம் வருங்கால் விகடன்

ஒருவனோ டுறுவீர் ; வருவரேல் எவரெனும்
ஓட்டுவேன்; உட்புறம் கூட்டேன் மிகையரை.

சேரன்

உந்தமக் கனைத்தையு முதவினேன் மறந்தீர்.

கமலினி

எந்தமக் கன்றிவே றெவர்க்கிவை உரியவாம் ?

சேரன்

நன்றே மொழிந்தனை நாணிலாக் கமலினீ !
ஒன்றே துணைவனோ உதவுவை எனக்குநீ ?

கமலினி

ஆமது நன்றே ; அஃதென் உறுதியாம்.

சேரன்

கொடியவர் நற்குணக் குன்றமே யாவர்,
இடையவர் இறுகிய கல்மனம் பெறுவதால்.
கேவலம் அறவே கீழ்ப்படா வெய்யவர்
ஆவதும் புகழுடைத் தாகும் உன்னிட.
[பார்ப்பதியை நோக்கி]
விடுத்தனை ஐம்பான் வீரரை நீயோ ;
கொடுத்தனள் கமலினி யொருவனை; குணமணி
ஆயினை ; இவளினும் ஐம்பான் மடங்கு
போயினை நிவப்பில் ; போவேன் நின்னொடு.

பார்ப்பதி

தங்கையாள் முடிவே தகும்;அது புரிமின் ;
அங்ஙனம் பணிஞர் அலகிலார் இருந்தனர் ;
ஐம்பான் வீரரேன் ? அகந்தையன் விகடனேன் ?
துன்பாம் சொற்களால் தூற்றினன் விகடன்.
பகடியேன் முதுமையில் ; படர்வீர் தனிமையில்.

கமலினி

விகடன் துடுக்கனேல், விலக்குமின் அவனையும்.
அவசிய மிலாமலே ஆள்பலர் தொடர்தலேன் ?

சேரன்

அவசிய மிலாப்பொருள் யாரே விலக்கினர் !
ஐயமெ டுத்துணும் ஆதுல ராயினும்,
கைதமில் சுமப்பன் கணக்கில் பொருள்தமை.
எந்தமக் கியற்கையி லியையவன மாத்திரம்
சொந்தமாய்க் கொண்டு துறக்கில் மற்றவை,
விலங்கே போலத் துலங்குவீர் நீவிர்.
நோக்குக நும்தம் யாக்கையை இருவரும்.
அவசிய மிலாப்பொருள் அடர்தலை அறிவீர்.
நவமணி அணிபல நயந்துசு மப்பதேன் ?
அன்னமும், நீரும், அரைத்துணி யன்றிச்
சொன்னமு நிலன்களும், துல்லிய உடுக்கையும்,
கூடமு மாடமும், குவித்திடு தவசமும்,
ஆடலும், பாடலும், ஆயிரம் பணிஞரும்,
இருப்பதேன் அவமாய் ! எற்றுவீர் அனைத்தையும்.
ஒன்றோ நுமக்குமற் றொன்றோ பிறர்க்கு !
நன்றே செப்பினீர் நாணிலாப் பேதைகாள் !
மனதே ! என்றனை வன்மையோ டொறுக்கும்
நினைவே ! அமைக ; நிமிண்டுதல் என்கொலோ !
பிறப்புறு கணமுத லிதுவரை யலகிலாச்
சிறப்பும், மாண்பும், செல்வமும், பிறவும்
என்பாற் சொரிந்தபே ரன்பார் கடவுளே !
தளர்வுறு முதுமையில் தாங்கொணா இன்மையால்
பிளவுறு மிதயநான் பெறவுளங் கொண்டையோ !
எளியேன், மெலியேன் எங்ஙனம் பொறுப்பென் !
அளியோ இஃதுமுன் ! அளித்தவென் மக்களே
எள்கிந லைகத்தெனை இழிவா யகற்றிய
தெள்ளெனு மறிந்தையோ ! இஃதுனக் கியைவோ !
நால்வகைப் படையொடு நணுகிய வெனைத்தோ
மால்பெறு பகைவரை மதியா தழித்தேன்.
மாணுச் செல்வியர் வஞ்சக மென்னுமிந்
நாணுப் படைமுனம் நடுங்கினேன் ; செயலிலாப்
பேதை நிகர்த்தேன்! பெரிதும் விந்தையே !
கண்களே நீவிர் பெண்களின் படையாம்

கண்ணீர் சொரிந்தென் கண்ணியம் போக்க
எண்ணிய தென்கொலோ ! எதிரியா யபலைகள்
நண்ணிய தாலோ ! நாயினு மிழிந்திடு
கயவரே ! எத்தலைக் கடுமனம் பெற்றீர் !
உயர்ந்தவர் கெடினும் உயர்வே கருதுவர்
என்பது சிறிதுமே எண்ணுதல் அற்றீர்.
அன்பிலார் வாயிலை அறிஞர் மிதிப்பரோ !
சோற்றிற் கில்லான், சொல்வதை யெல்லாம்
தூற்றினும் செய்வான், தோத்திரம் புரிவனென்
றெண்ணினீர் போலுநீர் ? இனிமுகம் நோக்கேன் ;
பெண்களோ நீவிர்; பேய்களே யானீர்.
எழுமின் வீரரே; ஏகுவோம் விகடா ;
விழுமிய வீசையா ; விரைவோம் வெளியில்.

[சேரன், வீரர்கள், விகடன், பப்பநாபன், குலசேகரன் ஆகியோர் வெளியேறுகின்றனர். அப்போது காற்றும் மழையும் உண்டாகின்றன.]

கோல்லன்

காற்றும் தூற்றலும் கண்களை யொறுத்தன !
தூற்றிஅ கல்வோர் துன்னுவர் திரும்பவும்.
உட்புறம் செல்வோம் உறுவீர் அனைவரும்.

கமலினி

விருந்தாய் வந்தனம் ; வீரரும், பலரும்
இருந்திடல் தகுமோ ! இடமே திங்ஙனம் !

பார்ப்பதி

நன்மதி யற்றிடில் நண்ணுவான் இன்னலை ;
சொன்மதி கேளான் ; சுகத்தை இழப்பான்.
குற்றம் அவனதே ; குவிபல தீமைகள்
முற்றும் தன்பலன் ; முனிவிற் குரியவாம்.

கமலினி

முதியவர் தனிமையில் வதிவரேல் என்மனை,
மீறிய அன்பொடு மிகைப்படப் பேணுவேன்.
வேறெவர் தொடரினும் விரும்பேன் ; விலக்குவேன்.

பார்ப்பதி

கூறிய நினைவையே கொண்டேன் யானும்.
[குலசேகரன் வருகிறான்]

கோல்லன்

முதியவர் எங்ஙனம் முடுகினர் தெரிந்ததோ?

குலசேகரன்

பரிதமைப் பூட்டிடப் பணித்தனர் செல்லக்
கருதிய தெங்கெனக் கழறு தேகினர்.

கோல்லன்

குறிப்பை உணர்ந்திலன்; குரங்கின் பிடியினன்;
விருப்பின் விதமே விடுத்துப் பிடிமின்.

குலசேகரன்

அண்டம் செவிடுற அசனிகள் ஆர்த்தன.
கொண்டல் அனைத்தும் குழுமித் திரண்டு
படியில் கடலே படியப் பெய்தன.
நொடியில் மின்கள் நூறாய்ப் பிளந்து
கண்களில் இமைகள் கவிந்திட வொளிர்ந்தன.
திண்ணிய பெரும்புயல் சேகுறு தருக்களைத்
துரும்பெனப் பெயர்த்துத் தூற்றின எங்கணும்.
கரும்பே ரிருளே கண்டோம் உலகில்.
குளிரும் பனியும் குலைதமை உலுக்கின.
அளியில வாயின ஐம்பெரும் பூதமும்.
எங்ஙனம் தங்குவர் எம்பே ரண்ணல்.
இங்ஙனம் ஒழுகுதல் இயையுமோ? நீதமோ?

கமலினி

மடமையும், அடமும், மாபெரும் குருவாம்.
மிடியும், இன்னலும், முடிவிலா விசனமும்
நன்மதி யூட்டும்; சொன்மதி கேட்டிலன்.
குறும்பனும், துடுக்கனும் கூடி நடத்தினர்.
குறும்பா டொத்தனன் குணத்தினில் எந்தை;
பெயர்வோம் வம்மின்; பின்னர் மொழிகுவோம்.

கோல்லன்

பெயர்ந்தோர் திரும்பின் பெரும்போர் விளையும்.
அடைமின் கதவுகள் அனைத்தையும் உடனே.

[ஏவலர் கதவுகளை மூடித் தாளிடுகின்றனர். எல்லோரும் உள்ளே செல்கின்றனர்.]

இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

[சேரன் தன் பரிவாரங்களோடு குலசேகரனது மாளிகையின் வாயிலை அடைகிறான். தன் கடிதத்தைப் பெற்றவுடன் கமலினி தன் கணவனுடன் குலசேகரனுடைய மாளிகைக்கு வந்த காரணமென்னவென்று ஒரு வீரனிடம் சேரன் கேட்கிறான். கடிதம் கிடைப்பதற்கு முன், அவர்கள் அங்கே வர எண்ணவில்லையென்றும், கடிதத்தைக் கண்டவுடன் புறப்பட்டு அவசரமாய் வந்ததாகவும் தான் கேள்வியுற்றதாய் அவ்வீரன் மறுமொழி கூறுகிறான். அப்போதும் தொழுக்கட்டையில் மாட்டப்பட்டுக்கிடந்த பப்பநாபனை அவர்கள் பார்க்கின்றனர். அவன் சேரனை வரவேற்கிறான்; அவனுடைய நிலைமையைக் கண்டு சேரன் ஆச்சரியமும், கோபமும் கொண்டு, அவ்வளவு பெருமையான ஆசனத்தில் அவனை வைத்தார்களாவென்றும், அது ஒரு புதுமாதிரியான வசதியாவென்றும் கேட்கிறான். அப்போது விகடன், "குதிரைகளை முகத்தால் கட்டுவர், நாய்கள், காடிகள் முதலியவைகளை கழுத்தால் கட்டுவர், குரங்கை இடுப்பால் கட்டுவர், மனிதனைக் கால்களால் கட்டினர்; அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டு, மனோ வேகத்தைக் காலுக்கு ஊட்டி அவசரமாய் வந்ததால், அதற்கு இன்பம் உண்டாக்க, அவ்வாறு கட்டினர் என்று மறுமொழி கொடுக்கிறான். அவ்வாறு அவனை இழிவுபடுத்தியவன் யாவன் என்று சேரன் பப்பநாபனிடம் கேட்க, புருஷன் மனைவி ஆகிய இருவருமே அப்படிச் செய்ய உத்தரவிட்டதாக பப்பநாபன் கூறுகிறான். அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்று சேரன் சம்சயித்து, அதைப்பற்றி மிகுந்த ஆத்திரமடைந்து, அதன் காரணம் என்னவென்று கேட்கிறான். பப்பநாபன்

நிகழ்ந்ததை விரிவாகக் கூறுகிறான். அதைக் கேட்ட சேரன் அபாரமான விசனத்தி லாழ்ந்து தத்தளித்து, தன்னை எதிர் கொள்ள கமலினி வராதிருந்ததைப் பற்றி பிரஸ்தாபிக்கிறான். அப்போது குலசேகரன் வந்து சேரனை வணங்க, அவன் தன்னை வரவேற்க கமலினி ஏன் வரவில்லை என்று கேட்கிறான். கொல்லத்திலிருந்து குதிரையில் சவாரி செய்து அங்கு வந்ததனால் உடம்பு நொந்ததாகவும், அந்த உபத்திரவம் தீர்ந்தவுடன் வருவதாகவும் கமலினி கூறியதாய் குலசேகரன் தெரிவிக்கிறான். அப்படியும் கமலினி சொல்லுவாளோ வென்று சேரன் ஆச்சரியமடைந்து, கொல்லத்தரசன் ஏன் வரவில்லை என்று கேட்கிறான். அவன் பிடிவாத குணமுடையவன், முன்கோபி, விவேகமில்லாதவன், பிறர் சொல்வதைக் கேளாதவன் என்று குலசேகரன் மறுமொழி கூறுகிறான். அதைக் கேட்ட சேரன், கொல்லன் அப்படிப்பட்டவன் என்பது தனக்கு அதுவரையில் தெரியவில்லை யென்று கூறி, தன் வேலைக்காரனைத் தொழுக்கட்டையில் இருந்து உடனே விலக்கச் சொல்வதன்றி, தான் கமலினியுடன் பேச விரும்புவதாகவும், அவள் வரமறுக்கின், தானே அவளிடம் போவதாகவும் கூறுகிறான். சற்று பொறுக்கும்படி கூறிவிட்டு குலசேகரன் உள்ளே செல்கிறான். சேரன் தான் ஒன்றை நினைக்க, அது வேறொன்றாய் முடிந்ததே என்று கருதி விசனித்துக் கொண்டிருக்க, கமலினி, கொல்லத்தரசன், குலசேகரன் ஏவலர் முதலியோர் அங்கு வருகின்றனர். குதிரை சவாரியின் உபத்திரவம் அவ்வளவு சீக்கிரம் குணப்பட்டுவிட்டதா என்று சேரன் கமலினியிடம் கேட்க, அவள் அவனை வரவேற்கிறாள். சேரன் பப்பநாபனைச் சுட்டி, பார்ப்பதி தன்னை எவ்வளவோ அலட்சியமாக நடத்தினாலும், பப்பநாபனை கமலினி நடத்தியதைப்போல் எதையும் செய்யவில்லை என்று கூறி, பார்ப்பதி தன் இருதயத்தை இரண்டாய்ப் பிளந்துவிட்டதாகத் தெரிவிக்கிறான். கமலினி, தன் அக்காள் புத்திசாலி என்றும், அவள் தனது கடமைகளை நன்றாயறிந்தவ ளென்றும், அவள் தவறாய் நடந்திருக்க மாட்டாளென்றும், அவளை இழிவுபடுத்திப் பேசுவது மூடத்தனமென்றும், வயதின் முதிர்ச்சியால், அவன் தன் நல்ல அறிவை இழந்து அவ்வாறு அவளைத் தூற்றுகிறானென்றும், துஷ்டர்

களான வீரர்களை அடக்கியது தவறல்லவென்றும், அவன் அவளிடம் போதலே ஒழுங்கென்றும் கமலினி கூறுகிறாள். தான் இனி பார்ப்பதியிடம் போக இயலாதென்றும், அவள் விஷத்திலும் கொடியவள் என்றும், கமலினி நற்குணமுடையவளாதலால், அவளிடமே தான் இனி இருக்க விரும்பியதாகவும், அவள் உதவும் கூழையும் தான் அருந்துவதாகவும் சேரன் கூறி அவளை இறைஞ்சுகிறான். அடுத்த மாதமே தன் மனையில் இருக்கவேண்டிய முறை என்றும், அந்தக் காலக்கிரமத்திற்கு முன் தான் அவனை ஏற்றுக்கொண்டால், அக்காளின் மனஸ்தாபம் தனக்கு ஏற்படுமென்றும், ஆகையால், அந்த மாதம் அக்காளிடம் இருந்து, அடுத்த மாதம் வரும்படி கமலினி கூறுகிறாள். அதைக் கேட்ட சேரன் அவர்கள் இருவரும் தன்னிடம் நடந்துகொள்ளும் மாதிரியைப் பற்றி ஆச்சரியமடைந்து, தன் தூதனை தொழுவில் மாட்டிய துடுக்கன் யாவன் என்று கேட்கிறான். அப்போது சங்கரன் அங்கே தோன்றி, கொச்சிலிருந்து பார்ப்பதி வந்திருப்பதாக கமலினியிடம் தெரிவிக்கிறான். உடனே பார்ப்பதியும் அங்கு வருகிறாள். சேரன் அவளைக் கண்டவுடன் கோபம் கொண்டு அவளைத் தூற்றி, அவள் துஷ்டையாதலால், அவளைத் தொட்டு வரவேற்க வேண்டாமென்று கமலினிக்குச் சொல்லுகிறான். சேரனுக்கு பைத்தியம் முற்றிவிட்டதென்றும், அவன் எப்போதும் அதுபோலவே அமர்க்களம் செய்கிறான் என்றும், தன் மனையில் இருக்கவேண்டிய காலத்திற்கு முன் அவனைக் கமலினி ஏற்றுக்கொண்டால், உலகம் தன்னைப் பழிக்குமென்றும், ஆகையால், அவனைத் தன்னிடம் அனுப்பும்படியும் பார்ப்பதி கமலினியிடம் கூறுகிறாள். கமலினி அவ்வாறு செய்யும்படி சேரனிடம் கேட்டுக் கொள்ளுகிறான். சேரன் தன் ஆளைத் தொழுவில் மாட்டியவன் யாவனென்று கொல்லத்தரசனிடம் கேட்கிறான். அவன் நிகழ்ந்ததைக் கூறுகிறான். அதைக் கேட்டு சேரன் முன்னிலும் அதிகமாய்ச் சீறுகிறான். அவ்வாறு கூச்சல் இடுவதில் உபயோகமில்லை யென்றும், மிகுதி இருக்கும் ஐம்பது வீரர்களையும் விலக்கிவிட்டு அக்காளுடன் போய் இருந்து அடுத்த மாதம் வரும்படியும் கமலினி கூறுகிறாள். தான் பார்ப்பதியிடம் போவதைவிட, மாதவியை எவ்

வித பெருமையுமின்றி அழைத்துச் சென்ற இலங்கை யரச னிடம் போய்ப் பணிந்து உயிர் வாழலாம், அல்லது, கேவலம் குப்பையான சங்கரனுக்குச் சொந்தமான ஒரு நாயாய் மாற லாமென்றும், தான் கமலினியின் மனையிலேயே இருக்கப்போவ தாகவும் கூறுகிறான். அது கூடாத காரியம் என்றும், அவர் பார்ப்பதியோடுதான் போகவேண்டும் என்றும் கமலினி கூறு கிறாள். சேரன் அதைக் கேட்டு அதிசயிக்கிறான். தான் நியா யத்தையே சொல்வதாகவும், அரண்மனையில் எத்தனையோ வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்றும், சேரனுடைய பணி களை அவர்கள் புரிவார்கள் என்றும், அவர்கள் தவறினால், தாங்கள் அவர்களை தண்டித்து விலக்குவதாகவும், ஆகையால், அவன் வீரர்களை விலக்கவும், அடுத்த மாதம் திரும்பி வரும் போது விகடனை மாத்திரம் அழைத்து வரும்படியும், மற்றவர் வந்தால், உள்ளே சேர்க்க இயலாதென்றும் கமலினி கூறு கிறாள். அதைக் கேட்ட சேரன் முன்னிலும் அதிக விசன மடைந்து, பார்ப்பதி ஐம்பது வீரர்களை விலக்கி, ஐம்பது வீரர்களை நிறுத்தினாள் என்றும், கமலினி விகடன் ஒருவனை மாத்திரம் நிறுத்தி மற்றவரை ஒழித்துவிடச் சொன்னதால், கமலினியைவிட பார்ப்பதி ஐம்பது மடங்கு சிலாக்கியமானவள் என்றும், ஆகையால் தான் பார்ப்பதியுடனேயே திரும்பிப் போவதாயும் சேரன் கூறுகிறான். விகடன் குறும்புக்காரன் என்றும், அவன் தன்னை இகழ்கிறானதலால், விகடனையும் நீக்கிவிட வேண்டுமென்றும் கிழவருக்கு ஆசியம் அவசியமே இல்லை என்றும், பார்ப்பதி கூறுகிறாள். விகடன் துடுக்க னால் அவனையும் விலக்க வேண்டுமென்றும், அநாவசியமான மனிதர்கள் எதற்காக என்றும் கமலினி கூறுகிறாள். அதைக் கேட்ட சேரன் கோபித்துக்கொண்டு, தன் வீரர்கள், விகடன், பப்பநாபன் முதலியோருடன் போய்விடுகிறான். அப்போது புயல்காற்றும், மழையும் உண்டாகின்றன. குலசேகரன் பார்ப் பதி முதலியோருக்கு நியாயம் எடுத்துரைத்தது பயனில்லா மல் போகிறது. சேரனுக்கு எப்படியும் நல்ல புத்தி வருமென் றும், அவன் திரும்பி வருவானென்றும் கூறி, கதவுகளை மூடச்செய்து எல்லோரும் உள்ளே செல்கின்றனர்.]

தமிழ்ப்பெருமாட்டி

ஆசிரியர் வடுவூர் - கே. துரைஸாமி ஐயங்கார் B. A

இது மாத மொருமுறை வெளியாகும் பத்திரிகை. இதன் இரண்டாவது ஆண்டு 1935-ம் வருஷம் மே மாதம் முதல் ஆரம்பமாகிறது. இதில் ஒரு தொடர் நாவலும், சௌகரியத்திற்குத தக்கபடி, இதர விஷயங்களும் வெளி யாகும்.

		உள் நாடு		அயல் நாடு
வருஷ சந்தா	...	ரூ. 2 0 0		ரூ. 3 8 0
தனிப் பிரதி	...	ரூ. 0 3 0		ரூ. 0 6 0

(1) சந்தாத் தொகையை முன் பணமாக மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்; அல்லது, நேரில் செலுத்தவேண்டும். வி. பி. தபால் மூலம் சஞ்சிகைகளை அனுப்பினால் தபாற் செலவு அதிகமாவ தால், வி. பி. மூலம் சஞ்சிகைகள் அனுப்பப்படுவதில்லை.

(2) சந்தாதாரர் இவ் வருஷத்திற்குள் எப்போது சேர்ந்தாலும், இவ்வருஷ ஆரம்பத்திலிருந்து எல்லா சஞ்சிகைகளும் அனுப்பப்படும்.

(3) இது ஒவ்வோர் இங்கிலீஷ் மாதமும் 10உ யன்று வெளி யாகும்.

(4) விளம்பரக் கட்டண விகிதம் தெரியவேண்டுமானால், கடி தம் எழுதி, அல்லது, நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(5) எல்லா இடங்களிலும் விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு எழுதவேண்டும்.

வடுவூர் - கே. துரைஸ்வாமி ஐயங்கார் B. A

2-30, செங்கல்வராய முதலி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.